Regd. No. M. 4900 16 பக்கங்கள்.

குடி அரசு

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 22 } ஈரோடு 19-3-1949 சனிக்கிழமை } மலர் 28.

ஓடாதே அதிகாரி வீடுதேடி.

★

1. தன்மானம் தன்மதிப்புத் தனையிழந்து
தரணியிலே வாழ்வதொரு வாழ்க்கையாமோ?
உன்மானம் தனைக்காக்க உழைப்போருக்கு
ஊறுசெய்ய உளத்தாலும் நினைக்கலாமோ?
பின்னாளில் தோன்றுபவர் குறைசொல்லாரோ
பித்தனிவன் என்றுன்னை; எண்ணினாயோ?
என்னாளில் ஒழிவாரோ உன்னையொத்த
இழிகுணத்தோர் இந்நாடு ஏற்றம்கொள்ள.

2. அதிகார வர்க்கத்தின் அடியைநாடி
அலைகின்றாய் நாய்போல உணர்விழந்தே.
இதுவரையில் பலநூல்கள் படித்ததெல்லாம்
பொதுநலத்தை முன்னின்று கெடுக்கத்தானோ?
மதிகெட்டு மானத்தை விற்றுவாழ
மனதாலும் நினைப்பாரோ மானமுள்ளோர்?
எதற்காகப் பிறர்உன்னை ஏசுகின்றார்?
எண்ணிப்பார்! எண்ணிப்பார்! தெளிவாய்இன்றே.

3. தன்னலத்தைக் கருதாமல் நம்மோரெல்லாம்
தன்மதிப் புடன்வாழ வேண்டுமென்று
இந்நாளில் வாய்மூலம் எழுத்துமூலம்
இனியநம் உரிமைகளைக் கேட்போருக்கு
இன்னல்பல தேடுகின்றாய்; எதிரிதன்னை
எவரிடமும் ஆதரித்துப் பேசுகின்றாய்?
உன்னைநீ எண்ணிப்பார் உளமுரைக்கும்
உன்நெஞ்சே உனைநாளும் சுட்டெரிக்கும்.

4. உளத்தினிலே உறுதிகொள் உரிமைகேட்க
ஓடாதே அதிகாரி வீடுதேடி
இளிப்பாரே உன்செய்கை கண்டோரெல்லாம்
எனவெண்ணிப் பார்த்ததுண்டா ஒருநாளேனும்
குளிக்கப்போய்ச் சேறுதனைப் பூசிக்கொண்டு
கரையேறி வருபவனை உலகோர்கண்டு
அளிப்பாரோ அறிவாளி என்றபட்டம்
ஆராய்ந்துபார் அறிவாய் உனதுகுற்றம்.

(புதுவை வ. பொன்னம்பலம்)

அணுக்குண்டு காலத்தில் அக்கினியாஸ்திரம்!

★

சிலர்வாழப்பலர்வீழ்வது வேண்டாம்; ஒரு சிலர் உல்லாச புரியிலும், பலர் பட்டினி நகரிலும் உலவும் உலுத்தத்தனம் உதவாது. அனைவரும் சமமே, சீராக வாழ்வோம் என்று சபதம் கூறி, 'பல ஆண்டுகளாக ரஸ்புடீன் கொடுமையை ரசித்து, அக்கிரமத்தை அணைத்து, மதவாத மடமையை மஞ்சத்திலமர்த்தி, முதலாளித்துவத்தை முத்தமிட்டுத், தொழிலாளர் எண்ணத்தைத் துச்சமெனக் கருதி வந்த துன்மார்க்க ஜாரின் அரசியலை, சாவு முனையில் சந்தித்து வெற்றி கண்ட, ரஷ்யாவிலே ரஷ்ய மொழியிலே, அய்வருக்கும் தேவியாய் அழியாத பத்தினியாய் ஆண்டிருந்த அருமைத் துரோபதையின பாரதத்தை, செய்யப் போவதாக அன்றொருநாள் கேள்விப்பட்டோம். ஆச்சரியப்பட்டோம். பொருந்தாப் புராணம், விபசாரமெனும் விஷ வித்தைத் தூவி விட்டிருக்கும் வீணர் கதை; சூழ்ச்சியின் உருவங்கள் நிறைந்த உதவாக்கரை ஏடு; இதை சோபிதம் நிறைந்திருக்கும் சோவியத்திலே செய்யப் போகிறார்களாமே என்று. புதுமணம் பூத்துக்கிடக்கும் பூமியிலே பாரதமா என்ற எண்ணம்; கேலிச் சிரிப்பு நம் மனதிலே நிழலாடியது.

அடுத்துச் சில நாளிலே அதே பாரதத்தின் சாந்தி பர்வ ஆராய்ச்சிக்காக அருமை நேரு சர்க்கார் 'அறிஞர்களை' நேபாளத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறது என்று கேள்வியுற்றோம். பத்திரிகைகளிலே பார்த்தோம். வறுமை வாட்டும் இந்த நாட்டை வளங் கொஞ்சும் விளைநிலமாக்க வேண்டிய சர்க்கார், குமுறும் தொழிலாளியின் உள்ளத்தை, பட்டினியால் பரதவிக்கும் பாட்டாளிகளின் உள்ளத்தை, உழைத்து உழைத்து உளுத்துப்போன அந்தஅன்னக்காவடிகளின்உள்ளத்தை மகிழ்விக்க, ஆறுதலடைய ஒரு திட்டம், ஒரு வாக்குறுதி, ஒரு இரக்கப் பார்வை அளிக்க மறுக்கும் இந்தச் சர்க்கார், சாந்தி பர்வ ஆராய்ச்சி செய்வதா என்று அறிஞர்கள் மனம் வெதும்பினர். மக்களின் மூளையிலே படிந்திருக்கும் மாசினைப்போக்காமல், பாரதப் புதுப் பிரதியா என்ற ஏளனக் குரல் பல இடங்களிலே இருந்து கிளம்பின. அரசியல் எனும் கடலிலே காஷ்மீர், ஹைதராபாத் என்ற திமிர் பிடித்த திமிங்கலங்கள் திறந்த வாயுடன் காட்சியளிக்கின்றன. பக்கத்து பர்மாவிலே நம் மக்கள் பரிதவிப்பு. அண்டையிலுள்ள இலங்கையிலே இந் நாட்டார்க்கு இன்னல்; அடுத்திருக்கும் ஆப்ரிக்காவிலே நமதருமைத் தோழர்களுக்குத் துயரம். இத்தனைக்கும் ஈடு செய்யாமல் இந்த நாட்டுச் சர்க்கார் சாந்தி பருவ ஆராய்ச்சி செய்வதா? சீலமுடையோர் செயலா? சிரிப்பார்களே மற்றையோர் என்ற எண்ணமில்லையா என்று கேட்டோம். நாட்டின் முன்னேற்றத்திற்கு ஆவன செய்யுங்கள், அறிவுக்கு ஒவ்வாத இவைகளைவிட்டுவிட்டு என்று கூறினோம்.

சென்ற வாரத்திலே ஓர் சேதி;சிந்தனையாளர்களின் உள்ளத்தைத் துன்ப புரிக்கு இழுத்துச் செல்லும்சேதி; கற்றறிந்த நற்றறிவாளர்களைக் கேலி செய்திடும் சேதி ஒன்று. அது வஞ்சகத்தால் நீதியை வென்ற நீச இராம சரிதையை ஆங்கிலத்திலே இயற்றித் தருபவர்க்கு ரூ 31000-பரிசளிப்பதாக விளம்பரப்படுத்தியிருக்கிறார், சுகபுரியிலே உலவும் சொகுசுக்கார முதலாளி சர். புருஷோத்தமதாஸ் தாகூர்தாஸ். அதற்கென்று அறிஞர். எஸ். இராதாகிருஷ்ணன், பம்பாய் பிரதமர். பி. ஜி. கெர். உள்நாட்டுமந்திரி மொர்ராஜி தேசாய்; சானே முதலியோர் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறதாம். அணுகுண்டுக்காலத்திலே அக்னியாஸ்திரம். தேவையா? செய்யலாமா? உதவுமா? அந்த அறிஞர்கள், பெரியோர்கள், தங்கள் மூளையின் திறத்தை மக்களை மடமை புரிக்கு இழுத்துச் செல்லும் இராமாயணத்திற்கா செலவிடவேண்டும்.

பரிசுத்தொகையாளர் தோழர் புருஷோத்தமதாஸ், பாட்டாளிகளின் பச்சைரத்தத்தை உறிஞ்சிக்கொழுத்த அட்டை; அவர்களின் நெற்றிவியர்வை நிலத்தில்விழ, அதுவே அவரிடம் அருமை நஞ்சை, புஞ்சையாக, மாடி வீடாக, மோட்டார்வாகனமாக மாறிச் செல்ல, அதனால் அழகான வாழ்க்கை நடத்தும் விவேகி. இந்தச் சேதியைப் பார்த்த நேரத்திலே, அந்தத் தோழர்கள் என்ன எண்ணியிருப்பர். நாங்கள் ஓடாக உழைத்துப் போடுகிறோம். அதைக்கொண்டு உல்லாச புரியிலே சல்லாபவாழ்க்கை வாழ்கின்றாய். ஆங்கில இராமாயணத்திற்கு ரூ. 31,000. ஆனால் அதே நேரத்தில் எங்கள் அழுகுமழலைகள் மாதாவின் மார்பிலே பாலில்லையே என ஏங்கி அழ, அதைப்பார்த்து அவள் அலற, அதைக் கண்டு நாங்கள் விம்மும் நிலை எங்கள் வீட்டிலிருக்கிறதே. அரிசிவாங்கப் பணமில்லை. பக்கத்து வீட்டாரும் மறுத்து விட்டனர்; ஆகவே நேற்றைய நீராகாரம் தான் இன்றையத்தேனும் திணையும் என்று, பூனை உறங்கிடும் அடுப்பைப் பார்த்தவாறே பகர்ந்திடும் பத்தினியைப் பார்த்த நேரத்திலே எங்கள் மனம் பதறிடாதோ? முதலாளியே! முழுநேரமும் மனத்தளர்ச்சியடையாமல் தளர்ந்த உடலுடனேயே வேலை செய்கிறோமே, எங்கள் வாழ்க்கையின் சிறுவசதிக்காகும் கூலியாவது கொடுங்களேன் என்று கேட்ட நேரத்திலே கடிந்துரைத்து, கம்யூனிஸ்ட் நீ! உள்ளேபோய் இருந்து விட்டுவா என்று கூறும் முதலாளிகள் பெற்றெடுத்தபிள்ளையே! இராமாயணத்திற்கு ரூ 31,000-மா? இது தகுமா? தருமமா? என்றுதானே எண்ணியிருப்பர், சாதி ஒழிப்பு மசோதாவைக் கொண்டுவரக்கையாலாகாத பம்பாய் மந்திரிகள் மடமைநிறைந்த இராமாயணத்தைப்பற்றிப்பேசுகிறார்களே. பம்பாய் சட்டசபையிலே உள்ள பனங்காட்டு நரிகளின் சலசலப்புக்கு அஞ்சி, அனைவரும் ஒன்று என்ற நிலையைக் கூட அல்ல, சர்க்கார் வரையிலே சாதிகள் கூடாது என்ற கொள்கை வேண்டும் எனக் கூறும் மசோதாவைக் கைவிட்ட கனம் மந்திரிகள் முன்னால் வருவதா இதற்கு. வேறு வேலையில்லையோ? ஆளும் அமைச்சர்கள் அறிவு பெறும் கல்விச்சாலைகளை மாகாணத்திலே அமைத்துவிட்டனரா? உயிரைக் கொள்ளைகொள்ளும் விலை யேற்றத்தை ஒழிக்க வழி செய்தனரா? பாலங்கள் கட்டினரா? புதுப் பாதைகள் போட்டனரா? பாடுபட்டும் பஞ்சைகளாகக் காட்சியளிக்கும் பராரிகளுக்கு வாழ்வு அளித்தனரா? எது செய்தனர் இராமாயணத்தைப் போற்றவந்திருக்கும் இப் புனிதர்கள். மந்திரிகளின் ஆசனத்தை அலங்கரித்துக்கொண்டு, காத்துக்கிடக்கும்ஏவலர்களைவிரட்டி, பர்மிட் கேட்கும் தியாகிகளுக்குத் தினமும் கொடுத்துக்கொண்டு இருப்பதைத் தவிர வேறு என்ன செய்கின்றனர். விருந்துக்குச் செல்கின்றனர்; விசாரமற்று வாழ்கின்றனர்.

அறிஞர் இராதாகிருஷ்ணன் அகில உலகத்தையும் அறிந்தவர். அற்பர்களின் உரையே இராமாயணம் என்பதை நன்றாக அறிந்தவர்; இராமன்

(தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க)

[உரிமை ஆசிரியருக்கே]

தொல்காப்பியப் பொருளதிகார விளக்கம்.

—(புலவர் குழந்தை)—

I.

தொல்காப்பியம்.

இன்று நமக்குக் கிடைத்திருக்கும் பழந் தமிழ் நூல்களில் மிகப் பழமையானது தொல்காப்பியமேயாகும். இது இன்றைக்கு அய்யாயிரம் ஆண்டுகட்கு முன்னர் எழுதிய அரும் பெருந் தமிழ் இலக்கண நூலாகும். பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்னும் சங்கத் தமிழ் நூல்களெல்லாம் இதன் ஆணைக்குட்பட்டனவேயாகும். திருக்குறளும் இதன் இலக்கியந்தான். தொல்காப்பியர் தோன்றியதிலிருந்து தமிழ் மக்கள் அதன் ஆணைக்குட்பட்டே நூல் செய்து வருகின்றனர். தொல்காப்பியத்தைவிடச் சிறந்த நூலொன்று உலகிலுள்ள வேறு எந்த மொழியிலும் இல்லை என்பது ஆராய்ச்சி அறிஞர்கள் கண்டறிந்த முடிவு. கிறித்துப் பிறப்பதற்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, இன்று தலைசிறந்த நாகரிக மக்களாய்த் திகழும் நாட்டினரெல்லாம், நாடோடிகளாய்க் காடு மேடுகளில் அலைந்து திரிந்த அக்காலத்தே, எங்கள் தாய்மொழியிலிருந்துதான் உங்கள் தமிழ்மொழி பிறந்தது; எங்களவர் தாம் உங்களுக்கு மொழி தந்தனர் என வாயு மனமுங் கூசாமல் கூறுங் கூட்டத்தினர், கொன்றுண்ணும்கொலைத் தொழிலையுடைய கொடியராய்க் கொடுகி வாழ்ந்து வந்த அக்காலத்தே, ஒழுக்க மென்பது இன்னதென்றே அறியாத நிலையில் அவர்கள் இருந்த அக்காலத்தே, இவ்வளவு பரந்தபட்ட ஒழுக்க இலக்கண நூல் எழுதும் தகுதியில் இருந்த தமிழ் மக்களின் பெருமையே பெருமை என மனாட்டறிஞர்கள் வியந்து கூறும் மேம்பாட்டினையுடையது தொல்காப்பியம். தமிழர் வாழ்வென்னும் குளத்தின் உடையா உயர்கரை! ஒப்புயர்வில்லா ஒழுக்கக் களஞ்சியம்! பழந்தமிழரின் வரலாற்றுக் கண்ணாடி! நமக்காக முன்னையோர் ஈட்டிவைத்துப்போன எய்ப்பினில் வைப்பு! (சேமநிதி) பழமைக்குப் பழமை! புதுமைக்குப் புதுமை! செந்தமிழின் செவிலித்தாய்! தமிழரைத் தாழ்த்துவோரைத் தாக்கும் வடிவேல்! தமிழர் வாழ்வின் தகையரண்! இன்னும் கூறிக் கொண்டே போகலாம் இதன் பெருமையை. நம் பெருமையை நாமே கூறிக் கொள்ளும்குற்றத்திற்காளாகாமல் இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

தொல்காப்பியர்.

இப்பழந்தமிழ்ப் பேரிலக்கண நூலைத் தொல்காப்பியர் என்னும் பழந்தமிழ்ப் பெரும் பேராசிரியர் செய்தனர். தொல்காப்பியம் ஒரு சிறந்த நூலாக இருப்பதால், தமிழரினும் தாங்கள் அறிவுடையோர் எனக் கூறிக் கொள்ளும் ஒரு கூட்டத்தார் தொல்காப்பியர் ஆரியர் என்றும், சமதக்கினி முனிவரின் புதல்வர் என்றும், பரசுராமனின் உடன் பிறந்தவர் என்றும், 'திரணதூமாக்கினி' என்னும் இயற்பெயரினை உடையவர் என்றும், அகத்தியர் மாணவர் பன்னிருவரில் ஒருவரென்றும் கதை கட்டி வைத்துவிட்டனர். வள்ளுவரைப் 'பகவன்' என்னும் பார்ப்பனுக்குப் பிறந்தவர் என்ற கட்டுக்கதை போன்றதே இதுவும். இவற்றுக்கெல்லாம் தொல்காப்பியத்தில் யாதொரு சான்றும் இல்லை. இவர் அகத்தியர் மாணவராயின் ஏதாவதோரிடத்தில் அகத்தியர் பெயரைக் குறிப்பிடாமலா இருப்பர். அவ்வளவு என்ன தமிழர்கள் செய்ந்நன்றி அற்றவர்களா? இவ்வளவு பெரிய தனித் தமிழ் இலக்கண நூல் செய்யும் நிலையில் அன்று ஆரியர்கள் இல்லை. இது தங்கள் இனப் பெருமை பேசும் பொய்க்கூற்றேயாகும். தொல்காப்பியத்தைச் செய்தவர் 'தொல்காப்பியர்' என்னும் தமிழ்ப்புலவரேயாவர். பெரும்பான்மையான பழந்தமிழ்ப் புலவர்களின் இயற்பெயர்—பெற்றோர் வைத்த பெயர் தெரியாதது போல இவரது இயற்பெயரும் தெரியவில்லை. தொல்காப்பியர் செய்தது தொல்காப்பியம், எனப்பெருமைகொள்வோம். தொல்காப்பியத்தைச் செய்ததால் தொல்காப்பியர் எனப் பெயர் பெற்றனர்.

தொல்காப்பியர் கால நிலை.

தொல்காப்பியச் சூத்திரங்களுள் சில ஆரியக் கொள்கையுடையன போல் தோன்றுதலால், ஆசிரியர் தொல்காப்பியர் இலக்கணம்செய்த போது தமிழகம் இருந்த நிலையைத் தெரிந்து கொள்வது இன்றியமையாததாகும். தொல்காப்பியர் காலத்தில் வடநாட்டு ஆரிய முனிவர் சிலர் விந்தமலையைக் கடந்து தமிழகம் புகுந்து காடுகளிலும், எல்லைப்புறங்களிலும் தங்கி வாழ்ந்து வந்தனர். அவ் அயல் நாடரில் பெரும்பாலோர் இரந்துண்டே வாழ்ந்து வந்தனர். அவ்வழக்கப்பெயரே இன்னும் இரப்போர்க்கு "அயல்நாடர்" எனவே வழங்கி வருகிறது. (அயல்நாடர்—பரதேசி) சிலர் தமிழ் அந்தணர்களுடன் நெருங்கிப் பழகி வந்தனர். கற்றுணர்ந்த பெரியோர்கள் அருளுள்ள முடையராய், தன்னலஞ் சிறிதுமின்றிப் பொதுநலம் செய்து வந்தனர். அவர்கள் அந்தணர் எனப்பட்டனர். அந்தணர்—அருளுள்ளமுடையோர். "மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மைபூண்

(தொடர்ச்சி 12-ம் பக்கம்)

கதை கற்பனை.

சிறுகதை

நான்காம் பருவம்

பழிக்குப்பழி!

போட்டி

எண் 1.

சபாபதி பிள்ளை அன்று தன் சாப்பாட்டை முடித்துக் கொண்டு கூடத்திலே போடப்பட்டிருந்த நாற்காலியிலே வந்தமர்ந்தார். எதிரில் இருந்த வட்டமேஜையின் மீது அன்றைய தினசரி பத்திரிகை காற்றில் பிரிந்து குலைந்து கிடந்தது. அதை எடுத்து சரி செய்து படிக்கத் தொடங்கினார். கொஞ்ச நேரத்தில் அவர், தர்மபத்தினி கோமதியம்மாள் வெற்றிலைத் தட்டை எடுத்துவந்து மேஜையின் மீது வைத்து விட்டு, சற்று விலகி தரையில்போய் உட்கார்ந்தாள். பத்திரிகை பார்த்துக் கொண்டிருந்தபிள்ளை கோமதியம்மாளைப் பார்த்து,

"பார்த்தியா இதை?"

"எதை!"

"நம்ம டிரைவர் ராஜு...

"ஆமா, அவனுக்கென்ன விடுதலை செய்துட்டாங்களா"

"இல்லை, பயல் எப்படியோ சிறையிலேருந்து தப்பி ஓடிட்டானாம்"

"தப்பிவிட்டானா? என்னமோ பாபம், எப்படியாவது சுகமாயிருக்கட்டும்! ஆமா, அன்னிக்கு என்ன தான் நடந்ததாம், இப்பவாவது சொல்லுங்களேன்"

"அப்பா! நினைச்சாலே பயமாயிருக்கு. அதையேன் கேக்கிறே"

"இன்னும்மா இந்த நடுக்கம். அடேயப்பா!"

"என்னமோ நீ இருந்திருந்தால் தெரியும் உனக்கு. எப்போதும் போலத்தான் அன்னிக்கும் புறப்படும்போது நடுச்சாமம் மணி 1 இருக்கும்"

"எங்கிருந்து, திருவனந்தபுரத்திலே யிருந்தா"

"ஆமா, வழியிலே குழித்துறையிலே வைத்து ஏழெட்டு போலீஸ் காரப் பயல்கள் 'ஸ்டாப்'ன்னு சொன்னான்கள். எனக்கு நெஞ்சு பக் பக்கென்னு அடிச்சுது. டிரைவர் என்னைப் பார்த்தான். நானும் நிறுத்த வேண்டாம், விட்டிடு விரைவாக என்றேன், அவனும் அமுத்தினான். கார் பறந்தது! படட்டத்திலே அவன்கள் விட்டிருந்த காரின் ஒரு பக்கத்தில் உரசிச் சேதப்படுத்திட்டு. என்னமோ தெய்வாதீனமா தப்பிப் பிழைச்சோம்.

"அப்படியேன் விடணுமாம். நிறுத்தச் சொன்னா நிறுத்திட்டுப் போறதுதானே"

"நிறுத்தவா? சரிதான். இப்போ ஒங்கிட்டே பேசிக்கிட்டிருப்பதுக்கு பதிலா ஜெயிலிலே மற்றக் கைதிகளோடே பேசிண்டிருக்கலாம்"

"என்னது, தெளிவாத்தான் சொல்லுங்களேன்"

"காரை நிறுத்தினா அவன்கள் வந்து சோதனை போடுவான்கள். உள்ளேயிருந்த பத்துக் கெட்டு நூலும் அவன்கள் கண்ணிலே படும். அவ்வளவுதான். கோர்ட்டிலே கேஸ் நடக்கும். முடிவு ஆயிரம் ரூபாய் அபராதமும் ஆறு மாசம் கடுங்காவலும் என்றிருக்கும்!"

"அப்பப்பா! கடவுள்தான் காப்பாத்தினாரு போலிருக்கு. அய்யோ பாபம்! பாபம் ஓரிடம் பழியோரிடம் என்பார்களே அது சரியாய்த்தான் போச்சு. சும்மா இருந்த ராஜுவை ஏன் புடிச்சு வச்சாளாம்!"

"நமக்காத்தான், எப்படியோ நடந்தது காட்டுத்தீ போல எங்கும் பறந்துட்டுது. ஊர் வாயை மூட முடியுமா? இன்ஸ்பெக்டர் நமக்கு ரொம்பவும் வேண்டியவர். அல்லாட்டிப்போனா நாம் செய்த குற்றமென்ன சாமான்யமானதா? அவரேதான் சொன்னார், டிரைவரை மட்டும் சரிக்கெட்டுங்க, அப்புறம் உள்ளதை நான் பார்த்துக்கிறேன்னு". ராஜுவைக் கேட்டேன் நானும், "ராஜு உன்னாலே தான் காரியமாக வேண்டியிருக்கு, நீமாத்திரம் குற்றவாளி நான்தான், என்னமோ பயத்தால் கை காட்டியது போலீஸுன்னு கூடத் தெரியாமல் வண்டியை நிறுத்தாமல் வந்துட்டேன், இந்த ஒருமுறை மன்னிக்கணும்னு சொல்லிடு. அப்புறம் உனக்கு ஒரு ஆபத்தும் வராமே நான் பார்த்துக்கிறேன் என்று சொன்னேன். அவனும் நம்பினான். அதன் பலன்தான் அவனுக்கு இந்த ஜெயில் வாசம்."

"அய்யோ, பாவம். நம்பினவனை அப்படி மோசம் பண்ணலாமா?"

"அதுக்கு என்ன செய்யச் சொல்றே"

"என்ன செய்யலாம்னு அவன் கிட்டே அப்படி சொன்னீங்க"

"காரியம் ஆகத்தான். அப்படி சொல்லாட்டி போனா இப்ப நான் தானே போயிருக்கணும்"

"அதை நெனச்சாவது அஞ்சு, பத்து செலவானாலும் அவனை விடுதலை செய்ய பார்த்திருக்க வேண்டாமா"

"இந்தா கோமதி! சுத்த பைத்தியமால்லே இருக்கே. நீ சொல்றபடி அஞ்சு பத்திலே நிக்கிற காரியமா? கொறஞ்சது இப்போ 500 ரூபாயாவது வேண்டும். இப்ப பாரு ஒரு தம்பிடிகூட செலவு இல்லாமே, தானே தப்பிச்சுக்கிட்டான்"

என்று சொல்லிக் கொண்டிருக்கும்பொழுதே, அய்யாவுக்கு திருவனந்தபுரமிருந்து "போன்கால்" ஒன்று வந்திருப்பதாகப் புதிய டிரைவர் சொக்கன் வந்து சொன்னான். அவரும் போய் போனில் ஏதேதோ பேசினார். கடைசியாக சொக்கனை கூப்பிட்டு, சொக்கா, சாயங்காலம் நாலு மணிக்குத் திருவனந்தபுரம் போகணும், காரிலே பெட்ரோல் இல்லாட்டா போய் பெட்ரோல் பிடிச்சு கொண்டுவிடு" என்று சொன்னார். சொக்கன் அன்று தான் ஜோலிக்கு வந்தவன். அதனால் தானோ என்னமோ அவன் முகத்திலே ஓர் சந்தோஷக்குறி! அவனையுமறியாமல் அவன் தாடியை ஒருமுறை தடவி விட்டுக் கொண்டான்.

மணி நாலு அடித்தது. சொக்

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

திருக்குறள் அறம்!

★

II.

'அறனறிந்த' வர்களைத் துணையாகக் கொள்க என்று கூறும் வள்ளுவர், முன்னர் 'அறவாழி அந்தணனின்' தாள்சேர— துணைபெற நம்மை அழைத்து, இன்றேல் பிறவாழி—துன்பச் சூழல் நிறைந்த பிறகடல்களை நீந்தல் அரிது என்று அறிவுறுத்தினார். அதன் காரணம் அறக்கடவுள் துணையாக நிற்க, நாம் அறமுடையாரைப் பேணவும், அறவழிநிற்கவும் வேண்டும் என்ற அவசியத்தை அறிவுறுத்தத்தான்!

தூய அறிவு, நல்லமனம், விருப்பு, வெறுப்பற்ற பண்பட்ட மனம், உண்மைப் புகழ், ஐம்பொறியின் வழி மனத்தைச் செலுத்தாது அறிவு வழிச் செலுத்தும் போக்கு, ஒப்பற்ற நிலைமை, அறவழிப்பட்டமனம், ஆகிய எழு இயல்புகளைக் கடவுளாகக் கூறி இருக்கிறார் வள்ளுவர். அதற்குத் தகுந்தபடி குறள் முழுவதிலும் நாம் இறைவனுக்குச் செய்யும் தொண்டு அந்த அறிவு, நல்மனம் முதலியவற்றைப் பெற்று வளர்த்துப் பாதுகாப்பதே என்றும்; அவ்விறைவன் தாள் சேர்வது என்பது, அவற்றை உடையாரின் துணைபெறுவதே என்றும் கூறிச் சென்றிருப்பது, உண்மை அறிய அவாவும் நம் மனத்தைக் குளிர்விக்கின்றது. ஆனால் இத்தகைய 'அறம்' தழைத்த நாட்டிலேதான் இன்று அரசமரமும், அரைத்த மஞ்சளும், அறுகம் புல்லும், ஆவின் சாணியும் "சாமிகளாக"த் தலை நிமிர்ந்து நிற்கின்றன என்றால் அதற்கு அழுவதா? சிரிப்பதா?

அறமும்—அரசும்:

மனிதன் கூடிவாழும்போது தான் பிறந்த தாயகத்தினாலும், பேசும் மொழியினாலும் உடல் வண்ணம் ஒன்றுபட, பழக்க வழக்கம் முதலியவற்றால் ஒரு கூட்டத்தினராக மாறுகிறான். இந்த வகைய கூட்டங்களைப் பாதுகாப்பதே நாடு என்ற எல்லையும், அரசு என்ற ஆட்சியும்! எனவே தனி மனிதன் எவ்வாறு அறவழி ஒழுக வேண்டுமோ, அதுபோலவே அரசும் அறவழி நடக்கவேண்டும். அதுமட்டுமன்றி அவ்வழி நடந்து வழிகாட்டவேண்டும்—நாட்டு மக்களுக்கு! 'அறனிழுக்காது அல்லவை நீக்கி—அறம் மாறுபடாது, அறத்திற்குப் புறம்பானவற்றை அழிக்கவேண்டுமாம். அறத்திற்கு மாறுபட்டவற்றையும் அறவழியிலேயே நீக்கு! இது வள்ளுவரின் அறவுரை! அறத்தோடு நடப்பவற்றையும், அல்லாத வழியில் அடக்கு—இது நம் அரசியலாரின்

"அண்ணல்"

றம் வழுவாது மானத்தைக் காப்பதே அரசு" என்று அறம் தவறா அரசால் வரும் ஆக்கத்தை வலியுறுத்துகிறார்.

தனி மனிதனின் அற நீக்கத்தை—அறவுணர்வு கண்டிக்கும். அறநூற்களோ, அதைக் நடைமுறை? எப்படி நம் நாட்டு ஆட்சியின் வரன்முறை!

மேலும் "மறனிழுக்கா மானம் உடையது அரசு," வீரத்தினின் கூடாது என்று அறிவுறுத்தப் பயன்படும். ஆனால் இந்த இரண்டிற்கும் "அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது மன்னவன் கோல்"—நூல் அறம் ஆகிய இரண்டிற்கும் முதலாவதாய், மேம்பட்டதாய் நின்றது, மன்னவன் கோல். அதாவது அறவழி அரசே ஆகும். எனவே நாட்டில், உலகில் அறத்தை நிலைநாட்டும் பொறுப்பு பெரிதும் அரசுக்கே அல்லவா?

'அறத்தான் வருவதே இன்பம்' என்று முன்னர் வலியுறுத்திக் கூறிய வள்ளுவர், அதனால்வரும் பிறவற்றையும் திறம்பட உரைக்கிறார்.

சிறப்பீனும் செல்வமும் ஈனும்
அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு?

என்று கேட்கிறார். புகழையும், பொருளையும் கொடுக்கும் நல்வழி அறவழிதான். பிறவழிகள் ஒரு வேளை பொருளைக் கொடுக்கலாம். ஆனால் புகழைக் கொடுக்க முடியாது. மேலும், பழியையே கொடுப்பதாக இருக்கும். எனவேதான் அறவழி மறந்து பொருள் மட்டும் தேடி பழிக்கும் அஞ்சாது வாழ எண்ணும் கயவர்களுக்கு,

அறத்தினூஉங்கு ஆக்கமும்
இல்லை அதனை
மறத்தலி னூஉங்கில்லை கேடு.

என்று அறிவுறுத்துகிறார். அறத்தை மறந்தாலே அதைவிடக்கேடு பிறிதொன்றில்லை என்கிறார். சரி, அறத்தால் எவ்வாறு ஆக்கம் வருகிறது என்று கேட்டால், 'அறனறிந்து வெஃகா அறவுடையார்ச் சேரும், திறனறிந் தாங்கே திரு', என்று 'செல்வமும் ஈனும்' என்று பிறிதோரிடத்துக் கூறியதை வலியுறுத்துகிறார். அதுமட்டுமல்ல, 'சிறப்பீனும்' என்றும் அந்தக் குறளில் சொன்னதையே மீண்டும் ஒரு குறளில் 'நயனொடு நன்றி புரிந்த பயனுடையார் பண்பு பாராட்டும் உலகு',—நீதியுடன் அறத்தையும் விரும்புகின்றவரால் ஏற்படும் பயனை எண்ணி உலகு அவரைப் பாராட்டும் என்கிறார்.

'அறம்' என்றால் இல்லறத்தையே அது குறிக்கும். இது வள்ளுவர் வாய்மொழியும், தமிழ்ப் பண்பாடும் ஆகும். எவ்விடத்தும் குறளில் 'துறவறம்' என்று துறவுடன் 'அறம்' பிணைக்கப்படவில்லை. வேண்டுமானால் 'துறவு' என்று கூறுகிறார்; 'துறந்தார்' என்றும் கூறுகிறார். உலகை அல்ல, தங்களுக்குரிய கடமைகளை அல்ல, நல்ல பண்பு ஒழுக்கங்களை அல்ல—தீய குணங்களை 'நெஞ்சில் துற'க்க வேண்டும் என்கிறார். இல்லையே, பலர் உலகைத் துறந்துவிட்டதாகக் கூறி, காவி உடை, சடை, முடியுடன் இவ்வுலகில் காட்சியளிக்கிறார்களே மூக்கைப் பிடித்துக் கொண்டு தவம் செய்தால் முக்தி கிடைக்குமாமே, வேள்வி செய்தால் தாழ்வின்றிவாழவும், தருமம் தழைக்கவும், வரம் பெறவும் வாய்ப்பாகுமாமே என்றெல்லாம் கேட்க விரும்பினால் அவைகளுக்கும் வள்ளுவர் பதில் கூறிச் சென்றிருக்கிறார். காரணம் அவர் காலத்திலேயே ஆரியக் கலாச்சார அமைப்புக் கலப்பால்

ஏற்படும் இத்தகைய அல்லல்களைக் கண்டு, உணர்ந்து பின்னர் அவற்றைக் கண்டித்தும் சென்றிருக்கிறார். கண்டிப்பு என்றால், மிகவும் காரமானது, உள்ளத்தினின்றும் தெரித்து விழும் தீப்பொறிபோல! அவற்றில் சிலவற்றைக் காண்போம்.

"நெஞ்சில் துறவாத துறந்தார் போல் வஞ்சித்து வாழ்வாரின் வன்கணாரில்" — உண்மையிலேயே மனத்தினால் துறக்கவேண்டிய தீய பண்புகளைத்துறவாது, காவி உடைகாட்டிப் பிறர் கருத்தை மறைத்து அதனால் தன் வயிற்றை வளர்த்து வாழும் 'துறவி'களைப் போன்ற கொடியவர்கள் வேறு இல்லவே இல்லை, என்கிறார். "மழித்தலும், நீட்டலும் வேண்டாவாம் உலகம் பழித்தது ஒழித்து விடின்," என்று அதனையே வற்புறுத்தி மொட்டை அடிக்கவோ சடையை நீட்டவோ வேண்டியதில்லை, உலகம் 'தீது' என்று பழிக்கும் செயல்களை நீக்கிவிடு, துற! அவ்வாறு செய்தாலே போதுமப்பா என்கிறார். 'உற்றநோய் நோன்றல், உயிர்க்கு உறுகண் செய்யாமை அற்றே தவத்திற்கு உரு,' என்று கூறுகிறார். தான் செய்யவேண்டிய கடமைகளைத் தவறுதல் இன்றிச் செய்வதும், பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாதிருத்தலுமே 'தவம்' என்கிறார். ',தவத்திற்கு உரு'' என்று வடிவமாக்கித் தெளிவு படுத்துகிறார், மூக்கைப்பிடித்து முணு, முணுக்கும் வடிவம் நம் மனத்துள் புகுந்து விடாதிருக்க! "உயிர்க்கு உறுகண் செய்யாமை" என்று சொல்லியவர் "அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று" எனவும் அதனையே வலியுறுத்தி அவர் காலத்திலேயே புகுந்து, வளர்ந்து, இன்றளவும்கூட நம்மை விடாது இன்னற் படுத்திவரும் 'யாகங்களை'க் காட்டிலும் ஒரு உயிரைக் கொல்லாதிருத்தல் நன்று என்கிறார். ஓராயிரம் உயிர்களைக் கொன்று ஓர்யாகம் செய்வதை விட, ஓர் உயிரையும் கொல்லாதிருத்தலே அறம் என்கிறார். "அறவினையாதெனிற் கொல்லாமை" என்றே கூறுகிறார். அர்த்தமற்ற முறையில் தடை, தடை என்று "தடை" பல செய்யும் நம் அரசாங்கம் இந்த யாகங்களைத் தடை செய்தால் என்ன? தமிழ்ப் பண்பாட்டுக்கும் 'அறத்'திற்கும் மாறுபட்ட யாகங்களைத் தடை செய்யும் எண்ணமாவது ஏற்படுமா?

எனவே கூடிய வரையிலும் முற்றிலும் தீமையை, தீயபண்புகளை, அதற்கு அடிப்படையான ஆசையை அதனின்றும் தோன்றி வளரும் போட்டி, பொறாமை, வஞ்சகத்தைத், 'துறக்க'வேண்டும் என்று 'துறவு' என்ற அளவிலே வள்ளுவர் கூறியுள்ளார். அன்றி 'அறம் என்று இல்லறத்தையே குறித்துள்ளார். அந்த அறத்தின் இன்றியமையாமை, நன்மையாவற்றையும் விவரித்துள்ளார். வாழ்க்கைத்துணை நலத்தின் பெருமையை எடுத்தியம்பி உள்ளார். மற்றும் அறம் இன்மைக்கும் அதனால் வரும் கேட்டுக்கும் "பிறன் மனைவியை" நயப்பது ஒரு கேடாகும் என்றும் அதை நீக்கவேண்டும் என்றும் பல குறள்களில் கூறிஉள்ளார். "அறன் கடை நின்றாருள் எல்லாம் பிறன் கடை நின்றாரில் பேதையார் இல்" என்று கூறுகின்றார். பேதைமையால் அறத்தைக் கைவிட்டவருக்குள் எல்லாம் பிறன் மனைவியை விரும்பியவரே பெரும் பேதையர் என்று கூறுகிறார். அறத்தோடு இல்வாழ்வு நடத்த வேண்டும் என்றால், பிறன் மனைவியைக் கருத்தில் இருத்தாதே என்றும், அவ்வாறே மனத்தை அடக்கி வாழ்வதே "பேராண்மை" ஆகும் என்றும் கூறுகிறார். பிற இன்பங்களை வேண்டுபவர் பிறன் மனைவியாளை விரும்பும் பேதைமையைக் கைவிட்டுவிடவேண்டும் என்றும் அடுக்கடுக்காக அறிவுரை கூறுகின்றார். வேறுபல அறத்திற்கு மாறுபட்ட செயல்கள் புரிந்

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

திராவிடத் தந்தை பெரியாருக்கு திருச்சி நகரசபையின் வரவேற்பு!

திருச்சி. 13.

திராவிடர் தந்தை பெரியார் ஈ. வே. ராமசாமி அவர்களுக்கு திருச்சி நகரசபை நேற்று மாலை உற்சாகமான வரவேற்பளித்து உபசரித்தது.

வரவேற்பிதழ், அழகிய வேலைப்பாடமைந்த வெள்ளிப் பேழையில், பேழையின் முகட்டை நல்ல அழகான பூ வேலைப்பாடுடன் அமைந்த திராவிடரின் கருங்கொடியும், அதனடியில் டி. எம். சி. என்ற எழுத்துக்களும் அணி செய்யவைக்கப்பட்டிருந்தது. பேழையின் உட்பகுதியில் பெரியார் ஈ. வே. ராமசாமி அவர்களுக்குத் திருச்சி நகர சபையார் 12—3—49ல் வழங்கியதாக நகரசபைத் தலைவர் எட்வர்ட்பால் மதுரம் அவர்களின் பெயருடன் ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்டிருந்தது.

தன்னைக் கௌரவித்து வாசிக்கப்பட்ட வரவேற்புக்கு, பெரியார் பதிலளிக்கையில் தற்போதைய நகரசபைகள் அதிகாரமற்றவைகளாய் இருப்பது மாறி, மக்களின் நலன் குறித்து நல்ல திட்டங்களை நிறைவேற்றுவதற்கான அதிகாரங்கள் அமையப் பெற்றனவாய் இருக்க வேண்டும் என்று கூறினார்.

திராவிடர் தலைவர் மேலும் பேசுகையில், தங்கள் தங்கள் பக்கத்திலுள்ள லாபம் தரத்தக்க தொழில்களையும், கைத்தொழில்களையும் நகரசபைகளே எடுத்து நடத்த வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

தற்போதைய நகரசபைகள் எந்தத் தலைவருக்கு வரவேற்பளிக்கலாம், எவரின் திருவுருவத்தைத் திறந்து வைக்கலாம் எனக் கட்சிப்பிரதிகட்சிகட்டுவதற்கான முறையில்தான் இருக்கிறது என தற்போதைய நகரசபைகளையும், முப்பது ஆண்டுகளுக்கு முன்னிருந்த முனிசிபாலிட்டிகளையும் ஒப்பிட்டுப் பேசுகையில் பெரியார் பகர்ந்தார்.

கடைசியாகப் பேசிய பெரியார், நான் வெளி நாடுகளில்' சென்று நேரில் கண்ட மேலை நாட்டு முனிசிபல் நிர்வாகங்களைப்போல் இந்த நாட்டு நகரசபைகளுக்கும் பூரண அதிகாரம் இருக்க வேண்டும். இந்தப் புரட்சிகரமான கருத்துக் கேற்ப நகரசபைகள் மாற்றியமைக்கப்படாத வரைமக்களுக்குப் பயன் கிடையாது எனக் கூறினார்.

இங்கர்சால் சொற்பொழிவு.

ஒரு நன்றி கூறும் நடப்பு!

தமிழாக்கம்:— நெடுஞ்சேரலாதன்.

ஆலயம் என்ன சாதித்தது?

ஆலயம் என்ன நன்மை செய்திருக்கிறது?

மனிதனுக்கு வீடு கட்டும் முறையையோ, துணி நெய்யும் முறையையோ, நோய் நீக்கும் முறையையோ, நோய் வராது தடுக்கும் முறையையோ, கப்பல் கட்டும் முறையையோ, கப்பல் ஓட்டும் முறையையோ, வலியை முறியடிக்கும் முறையையோ, அன்றி வாழ்வை நீட்டிக் கொள்ளும் முறையையோ கற்றுக் கொடுத்ததோ?

கிறிஸ்துவோ, அன்றி அவர் சீடர்களோ பயன் பெறும் நெறிக்கு வழி செய்ததுண்டோ? ஒரு சொல்லாகிலும் விஞ்ஞானத்தைப் பற்றியோ, கலையைப் பற்றியோ அவர்கள் கூறியதுண்டோ? தன் துணைத் தோழர்கட்கு எங்ஙனம் வாழ வேண்டுமென்றோ, இயற்கையின் எதிர்ப்பை எங்ஙனம் நீக்க வேண்டும் என்றோ, நோயைத் தடுப்பது எங்ஙனம் என்றோ, எப்படி வலியினின்றும் விடுபெற வேண்டுமென்றோ, பஞ்சம், பரிதவிப்பு, இன்னல் இவைகளினின்றும் நீங்கி எங்ஙனம் வாழவேண்டுமென்றோ அவர்கள் உணர்த்தியது உண்டோ?

இயற்கையின் தத்துவத்தைப் பற்றியோ, மனித வாழ்வைப் பாதிக்கும் உண்மைகளைப் பற்றியோ ஏதாகிலும் அவர்கள் விவரித்ததுண்டோ? ஆராய்ச்சியைப் பற்றியோ, படிப்பைப் பற்றியோ, எண்ணத்தைப் பற்றியோ ஏதாகிலும் அவர்கள் சொன்னதுண்டா? தன்னம்பிக்கைத் தத்துவத்தையோ இயந்திர சாதனத்தைப் பற்றியோ, நியாயச் செய்கையைப் பற்றியோ, அவர்கள் போதித்ததுண்டா? எந்த ஒரு உழவனோ, இயந்திர வல்லுனனோ, விஞ்ஞானியோ புதிய எற்பாட்டினின்றும், ஒரு பயனுள்ள உண்மையைக் கண்டதுண்டா? மிகப் புனித நூலெனக் கூறப்படும் விவிலிய நூலினின்றும் பூதத்துவ ஆராய்ச்சியாளருக்கோ, வான மண்டல ஆராய்ச்சியாளருக்கோ, உடற்கூற்று வல்லுனர்க்கோ, வேறு கண்டு பிடிப்பாளருக்கோ, உற்பத்தியாளருக்கோ ஒரு நன்மை பயக்கும் ஆதாரமாகிலும் கிடைத்ததுண்டா?

மனித சமுதாயத்திற்கு ஆலயம் என்ன நன்மை செய்திருக்கிறது?

முதல்முதலிலேயே அழிவையும், பயனில்லாப் பூப் பொருள்களைப் பற்றியுமே போதித்து இருக்கிறது. மூர்க்கப் பணத்தாசையையும், பஞ்ச ஆசிர்வாதத்தைப் பற்றியும் கூறியிருக்கிறது. இவ் வாழ்க்கை வியாபாரம், மடிதலுக்காகவே ஏற்பட்டது என்று போதித்துள்ளது. முக்திக்காக ஒவ்வொருவரும் ஒரு சிலவற்றில் நம்பிக்கை யுடையவர்களாய் இருத்தல் வேண்டும், இன்றேல், அய்யமுடையவராயிருப்பின் அவர்கள் பாவிகளாய் இன்னலுறுவர் என்று போதித்து இருக்கிறது. கோயிலின் இலக்கணப்படி ஆசைகள், உணர்ச்சிகள், விருப்பங்கள் எல்லாம் கேவலமும், பாபகரமுமானவையாம்!

கடவுளை நேசிப்பதற்காக, தன்னம்பிக்கைமறுக்கவும், ஆசைகளை முறியடிக்கவும், பொருளை இகழவும், முன்னேற்றத்தை வெறுக்கவும், மனைவி மக்களை மறுக்கவும், தழைகளிலும் கிழங்குகளிலும் வாழ்க்கையைக் கழிக்கவும், திரும்பத் திரும்பப் பிரார்த்தனையை உச்சரிக்கவும், கிழிந்த ஆடை உடுத்தவும், பாழ் பட்ட இடங்களில் வதியவும், அன்பை இதயத்தினின்று நீக்கவும், பல நூற்றாண்டுகளாக முயன்றனர்; அதுதான் உண்மையான முறையாம்.

அப்படி முயன்றவர்கள் துறவிகள் எனப்பட்டனர்.

துறவிகள் மக்களுக்கு உதவவில்லை. மக்கள் துறவிகளுக்கு உதவினர். அவர்கள் பிறருக்காக உழைக்கவில்லை. அவர்கள் யாசகர்கள், அயோக்கியர்கள், பாசாங்கு செய்பவர்கள். அவர்கள் மூடர்கள். அவர்கள் கிறிஸ்துவின் போதனையைப் பின்பற்றினர். எதிர்காலத்தைப் பற்றி அவர்கள் எண்ணியது இல்லை. அடுத்த உலகிலே பெறப்போகும் மகிழ்ச்சிக்காக, அவர்கள் தங்கள் உடலங்களைப் பாழ்படுத்திக்கொண்டனர்; தசைகளைப் பிறிக்கொண்டனர்; எண்ணங்களைச் சிதறடித்துக்கொண்டனர். வாழ்க்கைப் பயணக் காலங்களிலே அவர்கள் கண்களெல்லாம் புதை குழியை நாடி இருந்தன. பசுமையான வழிகளிலே, மலர் சேர்த்துக் குவிக்கும் பாதையிலே செல்லவில்லை-சேர்க்கவில்லை. தூசு நிறைந்த பாதைகளிலே நடந்தனர். அவர்கள் துக்கக் கீதங்களை, எல்லாக் கீதங்களைவிட, மகிழ்ச்சியோடு செவியில் ஏற்றுக்கொண்டனர். குழவி மழலையோ, புள்ளினக் கீதமோ, குழவியின் நகைப்போ, அவர்கட்கு இன்பம் கொடுக்கவில்லை. மகிழ்வு பாபத்தின் குழந்தை; அவர்களுக்கு மகிழ்ச்சி மாற்று இதயம் தேவைப்பட்டது. அவர்கள் நம்பிக்கையுடையவர்களாம்; புனிதர்களாம், அய்தீகர்களாம், ஆனால் [?] அவர்கள் மோட்ச உலகத்துக்காக ஏங்கிக்கிடந்தனர்.

ஆலயம் யாது செய்துள்ளது?

ஆலயம் பெருமையையும், உயர் வாழ்க்கையையும், செல்வ வாழ்க்கைக்குதவும் சாதனங்கள் எவற்றையும், அறிவின் மகிழ்ச்சியையும், அன்பின் நறுமணத்தையும், இதயப்பூரிப்பையும், மனைவிமக்களின் அணைப்பையும், முத்தத்தையும் வெறுக்கக் கற்றுக் கொடுத்திருக்கிறது.

தற்கால இவ்வுலக வாழ்க்கையினின்று விடுபடவும், புனிதனாகத் தன்னைத்தானே தயார் செய்து கொள்ளவும், இயற்கையை மீறவும், காணாத ஒன்றின்மேல் அன்பு செலுத்தவும், விருப்பமற்றவனாக ஆக்கிக் கொள்ளவும், உடலை வருத்திக் கொள்ளவும், குருதியைச் சுண்ட வைத்துக் கொள்ளவும், நாகரீக இறக்கைகளை மடக்கிக் கொள்ளவும், உலகில் மடிந்த பிணம்போல் இருக்கக் கற்றுக் கொடுத்து, என்றோ ஒரு கால்த்

(தொடர்ச்சி 10-ம் பக்கம்)

குடி அரசு

19—3—49 சனிக்கிழமை.

ஸ்தல சுயாட்சி!

இந்த மாதம் 12உ திராவிடத் தந்தை பெரியாரவர்களுக்குத் திருச்சி நகரசபை அளித்த சிறப்பு மிக்க வரவேற்பு, நம் காங்கரஸ் தோழர்களுக்கு—மந்திரிமார்களுக்குப் பெரும் மனக்கசப்பைத் தருமென்று கூறப்படுமானால், அங்கு பெரியார் கூறிய கருத்துக்கள், எத்தனையோ மடங்கு அதிகமான மனக்கசப்பை அவர்களுக்கு நிச்சயமாகத் தந்திருக்க வேண்டும்.

பெரியாரவர்கள் அந்த வரவேற்புக்குப் பதில் கூறும்போது, இன்றைய ஸ்தல ஸ்தாபனங்கள் சுயேச்சையாகச் செய்யக்கூடிய செயல்கள் இரண்டு; ஒன்று வரவேற்பு வழங்குவது, மற்றொன்று திருவுருவப்படம் திறந்து வைப்பது என்று கூறியிருப்பது வெறும் வேடிக்கைக்காகக் கூறிய விஷயமல்ல. இன்றைய ஸ்தலஸ்தாபனங்களின் உண்மையான யோக்கியதை அவ்வளவுதான். ஸ்தல ஸ்தாபனங்களில் முக்கியமாக முனிசிபாலிட்டிகள், பஞ்சாயத்துப் போர்டுகள் என்பவைகளில் அங்கம் வகிக்கும் எவரும் அந்த ஸ்தாபனங்களால் அந்த நகருக்கோ, ஊருக்கோ எந்த ஒரு பொது நன்மையையும் செய்ய முடியாத அளவில்தான் அவர்களுடைய அதிகாரம் 'பறிமுதல்' செய்யப்பட்டிருக்கிறது.

பறிமுதல் என்று ஏன் கூறுகிறோமென்றால், ஸ்தல ஸ்தாபன அமைப்பு முறையே அந்த ஸ்தலத்திற்கு வேண்டிய பொது நன்மை எது எதுவுண்டோ அது எல்லாவற்றையும் செய்வதற்குப் பூரண சுயாட்சியுடையதாய் இருக்க வேண்டுமென்பதே. வெளியாரின், முக்கியமாக அரசாங்கத்தாரின் தலையீட்டுக்கு நிர்வாகத்தில் இடமில்லாமல் இருக்கவேண்டுமென்பதே. ஆனால் இன்றைய ஸ்தல ஸ்தாபனங்களின் நடைமுறை எப்படி?

'மாடல்' குடி அரசாக விளங்க வேண்டிய ஸ்தல ஸ்தாபனங்கள், படிப் படியாகத் தன் எல்லைக்குட்பட்ட எல்லா நிர்வாகப் பொறுப்பையும் ஏற்று நடத்தவேண்டிய ஸ்தல ஸ்தாபனங்கள், நம் நாட்டில் படிப்படியாக, நாளுக்கு நாள் எல்லா அதிகாரங்களையும் இழந்தே வந்திருக்கிறது. இவற்றின் வரலாற்றை யறிந்தவர்கள் இதை மறுக்கமுடியாது.

சுயாட்சி என்று பெயர் கொடுக்கப்பட்டு, ஆனால் சுயேச்சையாகச் செய்வதற்கு ஒரு காரியமுமில்லை என்கிற இந்த நிலைமை வந்ததற்கு—வந்த நிலைமை மாறாமலிருப்பதற்கு யார் யாரைமேயா குறை கூறினாலும், பெரும் பொறுப்பாளிகளாய் இருந்தவர்களும், இன்று இருப்பவர்களும் நமது மதிப்புக்குரிய காங்கரஸ்காரர்கள்தான் என்பதை எவர்தான் இல்லை என்று சொல்ல முடியும்?

20-வருஷங்களுக்கு முன்னால் எல்லாம், ஸ்தல ஸ்தாபனங்கள் பணக்காரர்கள் கையில் சிக்கிக் 'கண்ட்ராக்டர்கள் ராஜ்யமாக' விளங்குகிறது என்று அன்றைக்குக் காங்கரஸ்காரர்களால் சித்திரிக்கப்பட்டு குறை கூறப்பட்டது என்றாலும், அந்த நிலைமையை உண்டாக்கியவர்களும் அவர்கள் தான். நாட்டில் பெரிய அரசியல் கட்சியாய்—வயதில் மூத்ததாய்—மற்ற கட்சிகளுக்கு வழிகாட்டியாய் இருக்கவேண்டிய காங்கரஸ், ஸ்தல ஸ்தாபனங்களைக் கட்சியின் பெயர் கூறிக் கைப்பற்றுவதில் தீவிரத் திட்டம் வகுத்தது. பணக்காரர்களோ பணத்தால் அடித்தடித்து அதை வீழச் செய்தார்கள். பிறகு வீசிய பணத்தை யெல்லாம் அவர்கள் திரட்ட ஆரம்பித்தார்கள். ஆகவே இந்தக் காரியத்தில், 'கண்ராக்ட் ராஜ்யம்' நடத்திய பணக்காரர்கள் எப்படிக் குற்றவாளிகளாகிவிட முடியும்?

பெரியாரவர்கள் காங்கரசிலிருந்த போதே, 1920-ம் வருஷத்திலேயே, அரசியல் கட்சியின் பெயரால் ஸ்தல ஸ்தாபனங்களைக் கைப்பற்றக்கூடாது என்று கூறினார்கள் என்றால், அதை அன்றையக் காங்காஸ் ஒப்புக்கொள்ளவில்லை என்றால், அதற்கு உண்மையான அர்த்தம் என்ன? ஸ்தல சுயாட்சி என்பதன் அர்த்தத்தைத் தெளிவாக உணர்ந்து கொண்டதும், உணர்ந்து கொள்ள மறுத்ததும் தானே காரணமாகும்.

> "நகரசபை வேலைகளில் அரசியல் கட்சிப் போட்டிகளைப் புகுத்துவது, அதன் வேலையைக் கெடுப்பதென்பது மட்டுமல்லாமல், நகரசபையால்மக்களுக்கு எதைச் சாதிக்க வேண்டுமோ அதை மறந்து, கட்சிச் சண்டைகளே பெரிதும் வளருவதற்கு இடமேற்பட்டு விடுகிறது"

என்று, பெரியாரவர்கள் அன்று திருச்சியில் கூறிய கருத்தானது; அனுபவத்தின் மீது கூறியது என்பது மாத்திரமல்ல, அவர்கள் பொது வாழ்வில் ஈடுபட்ட காலந்தொட்டே கூறிவரும்கருத்தாகும்.

இந்த வுண்மையைக் கண்ணாரக் கண்டு வருகிற காங்கரஸ்காரர்கள் பல வருஷங்களுக்குப் பிறகு இன்றைக்காவது இதை ஒப்புக் கொள்ளுகிறார்களா? கட்சிப் போட்டாபோட்டி கண்டிக்கப்பட வேண்டியது என்கிறார்களா? என்றால் என்ன பதில் சொல்ல முடியும்? 47ம் வருஷம் நடந்த ஸ்தலஸ்தாபனத் தேர்தலிலேகூட "யார் யாருக்குப் பதவி கொடுப்பது? யார் யாருக்குஇல்லை என்று கூறுவது" என்கிற தகராறைக் காரணமாகக் கூறித்தானே, நம் காங்கரஸ் தியாகிகள்—ஊழியர்கள் காங்கரசானது தேர்தலில் கலந்து கொள்ளக்கூடாது என்று தீர்மானித்தது. அப்படித் தீர்மானித்தும் அதைக் கிழித்தெறிந்து விட்டுப் பின் எங்கெங்கு செல்வாக்குண்டோ, அங்கெல்லாம் கட்சியின் பேரால்—'மங்களகரமான' மஞ்சளின்பேரால் நபர்களைக்காங்காஸ் நிறுத்தி வைத்தது. ஆகவே இந்த நடத்தையிலிருந்து அவர்கள்

உணர்ந்து கொண்டு விட்டார்கள் என்று எப்படிச்சொல்ல முடியும்?

ஸ்தலஸ்தாபனங்களுக்கு அதிகாரங்கள் அதிகரிக்கப்படும்என்று, 47லேயே (பிரகாசம் மந்திரி சபையிலேயே) கூறப்பட்டது என்றாலும், அது இன்றுவரை நடைமுறைக்கு வரவில்லை என்றால், அதற்குக் காரணம், ஆளவந்தவர்கள் கண்ட கனவின்படி அநேக இடங்கள் அவர்கள் கைக்கு சிக்கவில்லை என்பதுதானே! ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அதிகாரம் போதாது, கூட்டப்படவேண்டும் என்பதையுணர்ந்தும்; அதைநடைமுறைக்குக் கொண்டுவரப் போகிறோம் என்று கூறியும், பின்னால் இன்று வரை அதைச் செய்யவில்லை என்பதைப் பார்க்கும் போது, ஸ்தலஸ்தாபனங்களுக்குக் கொடுக்கும் அதிகாரம் தங்கள் கட்சிக்குவேலி அமைப்பதாய் இருக்கவேண்டும் என்கிற ஒரு நோக்கத்தைத் தவிர வேறு என்ன கருத்துக்கூறிவிட முடியும்?

சென்ற ஜூலை மாதத்தில் ஜில்லா போர்டுகளை மாற்றியமைப்பதற்காக ஒரு திருத்த மசோதா என்றுகூறி, பெரும் பொருள் சேர்க்க முடியாத எம். எல். ஏக்களுக்கெல்லாம் ஜில்லாப்போர்டை 'வேட்டைக் காடு' ஆக்கப்போகிறோம் இன்று இப்போதைய மந்திரிசபை கூறியதிலிருந்தே, ஸ்தல ஸ்தாபனங்களைப்பற்றி இன்றைக்கும் நம் காங்கரஸ்ரார்கள் கொண்டிருக்கும் கருத்தென்ன என்பது விளங்கவில்லையா?

மந்திரிசபை என்கிற கட்டிடத்திற்கு ஸ்தல ஸ்தாபனம் என்கிற அஸ்திவாரம் என்றெண்ணிக் கொண்டிருக்கும் வரையிலும், அதற்கேற்றபடி காரியங்கள் செய்யப்படும் வரையிலும் ஸ்தலஸ்தாபனங்களால், அங்க ஸ்தல மக்களுக்கு என்ன நன்மை உண்டாகிவிட முடியும்?

> ''நகரசபைகளில் திராவிடக் கழகத்தார் இருந்தால், விளக்கு வெளிச்சம் தராதா? அல்லது காங்கரஸ்காரர்கள் மட்டுமிருந்தால் விளக்கு எரியாமலே வெளிச்சம் உண்டாக்கிவிடமுடியுமா? கழகத் தோழர்கள் நகர சபைக்குச் சென்றால் ரோடெல்லாம் பொன்மயமாகி விடுமா? அல்லது காங்கரஸ்காரரேயிருந்தால் ரோடுகள் எல்லாம் இடிந்து விடுமா?''

இதைக் காங்கரஸ்காரர்கள் அறியாதவர்கள் அல்ல. ஆனால் ஸ்தல ஸ்தாபனங்கள் என்பதற்கு அவர்கள் அகராதியில் வேறு அர்த்தமல்லவா எழுதி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஸ்தலத்தின் மக்கள் நன்மைக்கு ஆட்சி புரியும் ஸ்தாபனங்கள் என்று பெரியார் அர்த்தம் கூறினால், ஸ்தலத்தின் மக்களை எங்களுக்குச் சேர்த்துத் தரும் ஸ்தாபனம் என்றல்லவா, அவர்கள் செயலால்சொல்லுகிறார்கள்? இப்படிச் சொல்லும் வரையிலும் ஸ்தல ஸ்தாபனங்கள்—சுயாட்சி என்பது எப்படி உருப்பட முடியும்?

தமிழ் நாட்டிலே சென்னைக்கு அடுத்தபடியில் 2வது இடத்தைப் பெற்றிருக்கும் பெரிய நகரம் திருச்சி. இதற்கு வருமானம் இந்தப் பணவீக்க காலத்தில் 31 லட்சம்தான் என்பதையும், அது செய்ய வேண்டிய செலவுகளுக்கு அரசாங்கத்தை எதிர்பார்க்க வேண்டியதாய் இருக்கிறது என்பதையும் குறிப்பிட்டு, ஆனால் அதே நேரத்தில் தனிப்பட்ட எத்தனையோ பேர் இந்த நகரத்திலேயே கோடி கோடியாய்ச் சம்பாதிப்பதில்லையா என்றும் பெரியாரவர்கள் கேட்கிறார்கள். கேட்பதோடு மட்டுமல்ல; அதற்கு மார்க்கமும் கூறுகிறார்கள்.

> ''ஒவ்வொரு நகரசபையும் சோவியத் நாட்டிலுள்ள சுயேட்சை பெற்ற சிறு சிறு யூனிட்கள் போன்றிருக்க வேண்டும். அந்தந்த நகர மக்களின் பெரும்பாலான காரியங்களும் அந்நகர சபையினராலேயே நிர்வகிக்கப்பட வேண்டும். அந்த அதிகாரம் அளிக்கப்படுவதோடு, இதன் தேர்தலில் எவரும் கட்சியின் பேரால் நிற்பதை அரசியலார் தடைப்படுத்தும் வகையில் சட்டம் விதிக்க வேண்டும்''

என்று கூறுகிற இருமுறைகளையும் பொதுமக்கள் எண்ணத்திற்கு-பரிசீலனைக்கு விட்டுவிடுகிறோம்.

''இயற்கைச் செல்வத்தை-மக்கள் உழைப்பைத் தேசீய உடைமையாக்குவதுதான் எங்கள் திட்டம்; ஆனால் முதல் இல்லையே, அதற்கேற்றபடி திறமையான நபருமில்லையே என்று கண்ணீர் விடும் காங்கரஸ் சோஷியலிஸ்டுகள், முதலைக் கண்ணீராய் இல்லாதிருந்தால், முதலில் இந்த வேலையை ஏன் தொடங்கக் கூடாது? நாட்டின் முழுப் பகுதியிலும், உடனடியாக இந்தத் திட்டத்தை நடத்திச் செல்லும் மனவுரம் இன்றைய ஆளவந்தார்களுக்கில்லை என்றாலும் குறிப்பிட்ட சில பகுதிகளிலாவது—ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தின் கீழ் ஸ்தலத் தொழில்களை—பெரும் வியாபாரத்தை ஏன் கொண்டுவரக் கூடாது?'' என்கிற எண்ணந்தான், நேரு சர்க்காரின் அநுதாபி என்று கூறிக்கொள்ளும் எவனுக்கும், பெரியார் அவர்களின் இந்தத் திட்டத்தைச் சிந்திக்கும்போது உண்டாகும் என்பது நிச்சயம்.

சிந்தனைக்குத் தெளிவாக, செயலுக்கு ஏற்றதாக, செய்வதற்கும் எளிதாக உள்ள இப்பேர்ப்பட்ட திட்டங்களை, நம் தேசிய சர்க்கார் எப்போதும் சிரித்துப் பேசிக் கிண்டல் பண்ணி வருவதுதான், அதன் வாடிக்கை என்பதை நாம் உணர்வோம். ஆனால் அந்தப் பருப்பு இனியும் வேகுமா? என்பதை இப்போது அவர்களே நினைக்கும் போதுதான், இந்தக் கருத்துக்கள் அவர்களுடைய சுயரூபத்தைப் படம் பிடித்துக் காட்டுவதாயிருக்கிறதே என்பதைப் பார்க்கும் போதுதான், இது அவர்களுக்கு எவ்வளவு பெரிய மனக் கசப்பை யுண்டாக்கியிருக்கவேண்டும் என்பது தெரியும்.

இதை மறைக்க எத்தனையோ திட்டங்களை அவர்கள் வெளியாக்கலாம். எங்கள் நேருசர்க்காருக்கிணை இவ்வுலகிலுண்டோ என்று பலமாக முழங்கலாம். சோஷலிஸ நேருசர்க்கார்! சோஷலிஸ நேருசர்க்கார்!! என்று வாய் வலிக்கப் பெருமையாகச் சொல்லலாம், துந்துபி பாடலாம். ஆனால் சோஷலிஸம் சோரம் போனபிறகு, தனிப்பட்ட முதலாளித்துவத்திற்குத் தூவப்பட்டிருக்கும் விதை எத்தனை நாளைக்கு வெளியாகாமல் இருந்து விடப்போகிறது? வயிறு பெருப்பதை மறைத்துக் கட்டிவிடலாம்! மாத முடிவில் வெளிப்பட்டுத்தானே - தீரவேண்டும்?

★

படித்துப் பாருங்கள்!

★

1. அறிஞர் பெர்னாட்ஷா கிரேக்க மொழியிலும் லத்தீன் மொழியிலும் தமக்கு எவ்வளவு பாண்டித்தியம் உண்டு என்பதைக் காட்டுவதற்காக சொல்லும்போது, ஷேக்ஸ்பியரை விடத் தன்னை சிறந்தவராகக் கூறுகிறார். "ஷேக்ஸ்பியர் காலத்தில் நானும் பிறந்திருந்து கவிதை ரூபத்தில் நாடகங்கள் எழுதியிருப்பேனானால் ஷேக்ஸ்பியரை வென்று அவரை ஏழையாக்கி விட்டிருப்பேன்" என்று ஷேக்ஸ்பியரைக் குறை கூறுவது சரியா என்ற கேள்விக்குப் பதிலளிக்கும்போது கூறுகிறார்.

2. பள்ளிக்கூடங்களைப் பற்றி அபிப்பிராயம் கேட்கும்போது அறிஞர் ஷா, அவைகளை வெடி வைத்துத் தகர்க்கவேண்டும் என்றுதான் கூறுவார். ஒருதடவை ஹெர்ட்போர்ட் ஷயர் என்ற கிராமத்தில் அறிஞர் ஷா தங்கியிருந்தார். அக் கிராமத்தில் உள்ள சீமாட்டி ஒருத்தி வந்து அறிஞர் ஷாவைப் பார்த்து, இந்தக் கிராமத்தில் உள்ள பள்ளிக்கு நீங்கள் என்ன செய்யப்போகின்றீர்கள் என்று கேட்டாள். ஷா தமது உண்மை அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவில்லை. ஏனென்றால், அதன் அருகில்தான் தங்கியிருந்தார். வெடி வைத்துத் தகர்த்துவிட்டால் தனக்கும் ஆபத்து என்ற காரணத்தினால், பதில் சொல்ல முடியாமல் சிறிது தயங்கிவிட்டு, அந்தச் சீமாட்டியையே ஒரு வழி கேட்டார். பரிசுப்போட்டி ஏற்படுத்துமாறு அந்தச் சீமாட்டி கூறினாள். ஏற்கனவே நல்ல நடத்தையுள்ள பையனுக்கு ஒரு பரிசும், நல்ல நடத்தையுள்ள பெண்ணுக்கு ஒரு பரிசுமிருப்பதால், மிகக் கெட்ட நடத்தையுள்ள பையனுக்கு ஒரு பரிசும், மிகக் கெட்ட நடத்தையுள்ள பெண்ணுக்கு ஒரு பரிசுமாக ஏற்படுத்துமாறு கூறினார். ஏனென்றால் மிகக் கெட்ட நடத்தையுள்ள பரிசுபெற்ற அவ்விருவரின் வாழ்க்கையையும் குறிப்பெடுத்து வைத்துக் கொண்டு, பிற்காலத்தில் அவர்கள் எப்படி மாறுகிறார்கள் என்பதைப் பார்ப்பதற்குத்தான் என்றும் காரணம் கூறினார். ஆனால் இப்பரிசு மறுக்கப்பட்டுவிட்டது.

3. அமெரிக்காவில், தந்தை தூரத்திலுள்ள தன் மகனுக்குக் கடிதம் ஒன்று எழுதி, சில புத்திமதிகளையும் கூறியிருந்தார். புத்திமதிகள் கூறும்போது, "அருமை மகனே! நீ எதுவேண்டுமானாலும் செய்! ஆனால் இரண்டு காரியங்களை மட்டும் செய்யாதே! ஒரு பெண்ணின் பின்னால் ஓடுவதும் டிராம் வண்டியின் பின்னால் ஓடுவதுமானவைகளை மட்டும் செய்யாதே. ஒரு டிராம்வண்டி உனக்குக் கிடைக்காமல் போய் விட்டால், அதன் பின்னால் ஒரு டிராம்வண்டி வந்து கொண்டிருக்கிறது. அதுபோலவே ஒரு பெண் போய் விட்டால், வேறொரு பெண் உனக்காக வந்து கொண்டிருப்பாள். நீ மட்டிலும் ஓடாதே!

4. இங்கிலாந்து தேசத்தில் சில சீமாட்டிகள் கல்யாணம் செய்துகொள்வதே கிடையாது. கல்யாணம் செய்துகொள்ளாத சீமாட்டிகள் 'லேப் டாக்' என்ற ஒருவகை நாயை வளர்த்து வருகின்றார்கள். இந்தநாயை அந்தச்சீமாட்டிகள் செல்லுமிடங்களுக்கெல்லாம் கொண்டுசெல்வார்கள். இந்த நாயைப் பார்த்தவுடன் அந்தச் சீமாட்டிக்குக் கலியாணம் இல்லை என்பதை உடனே தெரிந்துகொண்டுவிடலாம். கலியாணம் செய்துகொண்டு கணவனிடம் அவஸ்தைப்படவேண்டும் என்பதால், கணவனிடமிருந்து கிடைக்கப் பெறும் இன்பத்தை இந்த நாயிடமிருந்து ஒருவகையில் அவர்கள் பெற்றுக்கொள்கிறார்கள்.

5. தென் ஆப்ரிக்காவில் நீக்ரோக்கள் வியாபார நிமித்தமும் வேறுபல அலுவல் நிமித்தமும் வெளி நாடுகளுக்குச் சென்று பல மாதங்கள்வரையில் தங்கிவிடுவார்களாம். அதனால் இந்த நீக்ரோக்கள் வெளியே செல்லும் போது தங்கள் மனைவிமார்களுக்கு இடுப்பைச் சுற்றி ஒருவித இரும்பு அரைக்கால் சட்டையைப் போட்டுப் பூட்டிவிட்டு சாவியைத் தாங்களே கொண்டு சென்றுவிடுகிறார்களாம், அவர்கள் மனைவிகள்மீது அவ்வளவு சந்தேகம்(!) அந்த நீக்ரோப் பெண்கள் அதற்கெல்லாம் பயந்துவிடமாட்டார்கள். எவ்வழியிலேனும் அந்த இரும்புக் கால்சட்டையைவிலக்கிவிட்டு, தங்களுக்குப் பிரியமானவர்களோடு, இச்சையைப் பூர்த்திசெய்துகொண்டுவிடுகின்றனர்.

6. சைபீரியா பிரதேசத்தில் குளிர் காலங்களில் தண்ணீர் பனிக்கட்டியாக உறைந்துவிடுகிறது. அப்போது தண்ணீரிலுள்ள மீன்களும் மிருகங்களும் கூடப் பனிக்கட்டிகளின் நடுவில் தங்கிவிடுகின்றன. கோடை காலத்தில் பனிக்கட்டி உருகி தண்ணீராக ஓடும் போது, அதன் நடுவில தங்கிவிட்ட மீன்களும் மிருகங்களும் உயிருடனேயே இருக்கின்றனவாம். பனிக்கட்டிகள் உறைந்துவிடும்போது மீன்களும் மிருகங்களும் இறந்துவிடுவதில்லை.

—"எமாரம்"

[7ம் பக்கத் தொடர்ச்சி]

தில் கடவுள் முன் நிற்கும் போது, அவர் படைப்பின் எதிரிடைபோல் தோன்ற வேண்டும் என்ற முறையிலே வழி அமைத்திருக்கிறது.

ஆலயம் இன்னும் என்ன செய்துள்ளது?

ஆலயம் கடவுளின் வார்த்தையால் உண்டாகியதுஎனப்பாவனை செய்துள்ளது. பேரின்பம் என்ற பெயரிலேமரணவழியைத் தெரிந்து வைத்துள்ளது. நம்பிக்கையுள்ளவர்களே முக்திக்குப் பாத்திரர்கள் என்றும், அய்தீகர்கள் தாம் கந்தர்வர்களாக மாறுவர் என்றும், அய்யம் உடையோரெல்லாம் தண்டனைக்கு உள்ளாவர் என்றும், போதித்து இருக்கிறது. இவ்வெல்லாம் தெரிந்திருக்கவே ஆலயங்கள் வாதத்தின் எதிரியாகவும், ஆராய்ச்சியின் பரம வைரியாகவும் இருந்திருக்கிறது. இவை தெரிந்த பின் எற்றுக்கு ஆராய்ச்சி; எற்றுக்கு வாதம்; எற்றுக்கு சிந்தனை? ஆலயம் உலகை அடிமையாக்கி இருக்கிறது. பலவர்தத்திற்கு வக்காலத்து எடுத்து இருக்கிறது. உரையினின்றும் வாளை உருவி இருக்கிறது. அறியாமை இருளையாண்டும் ஏற்றிவைத்து, விலங்கிட்டு, மூடக்கொள்கையை மாளிகையாகக் கட்டிவைத்து, போரை நிலை நிறுத்தி வைத்திருக்கிறது. அழிவுக்குகந்த ஆயுதங்களைக் கண்டு பிடித்தும், உபயோகித்தும் இருக்கிறது. சூடிட்டும், புள்ளிகள் நிரப்பி அவமதித்தும், உருத்தெரியாது சிதைத்தும், சிறையிட்டும், அழிவைப் பரப்பியும், குருடாக்கியும், உயிருடன் தீயிலிட்டு எரித்தும், தூக்கிலிட்டும், சிலுவையிலறைந்தும், பல கோடிக் கோடிக்கணக்கான மக்களை பாழ்படுத்தியிருக்கிறது. உயிர் நரம்பை பிடித்து, எவ்வளவுவலி உண்டாக்க முடியுமோ, அவ்வளவையும் உண்டாக்கி மிருக ஆட்சி நடத்தியிருக்கிறது.

இவையாவும்உண்மையை நிலை நாட்டவும், நம்பிக்கை இன்மை, அய்யம் இவைகளை அழிக்கவும், முடியுமானால் ஒரு சில ஆத்மாக்களை காப்பாற்றவுமே இங்ஙனம் மிருக ஆட்சி செய்ததாம். ஆலயம்

நியாயமுடையதாம்! அறிவின் வளர்ச்சியைத் தடுக்கவும், முன்னேற்றத்தைச் சிறை செய்யவும், ஆலயத்தால் எவ்வளவு முடியுமோ அவ்வளவும் செய்துள்ளது. உரிமையாகச் சிந்திக்கவும், பேசவும் மக்களுக்கு உரிமை கொடுத்தால், தாமும், மற்றவர்களும், மூளையிலே அய்யமுடையவர்களாய் திகழ்வர் என்று ஆலயம் அய்யுற்றது. உரிமையாக சிந்திக்க விடுப்பின், புதிதாக பல கண்டுபிடித்து, பாதிரிகள் வார்த்தைகளில் நம்பிக்கை கொள்ளாமலும், ஆலயங்களை மறுத்தும், எதிரிடையான பலவற்றை ஏற்படுத்தினும் படுத்துவர் என அய்யுற்றது. "பேசும் உரிமை எம்முடையது. கேட்கும் கடமை உம்முடையது. எம் தொழில் உமக்குப் போதிப்பது, அதை நம்புவது உம்முடைய கடமை," என பாதிரிகள் சதா மக்கள் முன் புலம்பிக் கொண்டிருந்தனர்.

(தொடரும்)

(6ம் பக்கத் தொடர்ச்சி)

தாலும்கூட இதைச் செய்யாதே என்று நயந்து பேசுகிறார். அவ்வாறு பிறன் மனைவியை விரும்பாது தன் துணைவியுடன் நலமுற வாழும் சான்றோர்க்கு "அறம்" மட்டும் அல்ல அவ்வாறு வாழ்வது சிறந்த ஒழுக்கமும் ஆகும் என்று பாராட்டுகிறார்.

"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" என்று அறமே, இல்லறம் என்றவர் அஃது பிறன் ஒருவனால் பழிக்கப்படாத முறையில் நடந்தால் மிகவும் நன்று! என்று உற்சாகமூட்டுகிறார். மற்ற வழிகளில் "பேரின்பம் கிட்டுமே, இதனால் சிற்றின்பம்தானே கிட்டும் என்றால் "அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றிற் போஒய்ப்பெறுவதெவன்?" என்று கேட்கிறார். இல்வாழ்வை அறவழியில் நடத்தினால், வேறு வழிகளினால் எதுவுமே பயனில்லை என்று மறுத்துவிடுகிறார் ஒரே கேள்விக் குறியில்! மேலும் "ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை நோற்பாரின் நோன்மை உடைத்து" என்று இந்த இல்வாழ்க்கை—அறன் தவறாத வாழ்க்கை—அதைச் செய்பவரை விடச் சிறப்புடையதாகுமாம். அதன் பெருமை மிகப் பெரிது என்பதை விளக்க இவ்விதம் கூறுகிறார். "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும், பயனும் அது" என்று அன்பே பண்பாகும் என்றும், அறமே பயனாகும் என்றும் அவ்வாழ்வின் இயல்பை எடுத்துக்காட்டுகிறார்.

இத்தகைய அற வாழ்வையும், அந்த அடிப்படையினின்றும் எழும் அறச் செயல்களையும் எபபடி, எப்பொழுது செய்ய வேண்டும் என்பதையும் விவரிக்கிறார் வள்ளுவர். "செயற்பால தோரும் அறனே ஒருவர்க்கு உயற்பால தோரும் பழி"—ஒருவன் செய்யவேண்டியது எல்லாம் அறமே, ஆனால் அவன் ஒழிக்க வேண்டியதெல்லாம் பழி, என்று கூறுகிறார். "ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே செல்லும் வாய் எல்லாம் செயல்"—முடிந்த வரையில், முடிந்த இடத்தில் எல்லாம் இடைவிடாது அறத்தைச் செய்க என்று கூறுகிறார். மேலும் நிலையாமையை உணர்ந்து சாவு வருமுன்பே அதாவது, "நாச்செற்று விக்குள் மேல் வாரா முன் நல் வினை மேற்சென்று செய்யப்படும்" என்று நல் வினையைச் செய்ய முற்படவேண்டிய இன்றியமையாமையைக் கூறி, வீணான நாளின்றிப் பயன் தரும் நாளாக வாழ்நாளை நடத்தவேண்டுமெனக் கூறுகிறார். நிற்க

அறத்தின் ஆக்கத்தைப் பொறாமை அழிக்கும். எனவே பொறாமையைத் துறந்துவிடு என்கிறார். பிறர் அறம் அல்லாதவற்றைத் தன்பாற் செய்தாலும் தான் அறமல்லாதவற்றை அவரிடம் செய்தல் கூடாது என்று ஏசுவைப்போல், புத்தரைப்போல் இயம்புகிறார். "திறனல்ல தற்பிறர் செய்யினும் நோ நொந்து அறனல்ல செய்யாமை நன்று" என்பது அக் குறள். அற வழி தவறியதால் ஒருவன் வறியவனானால் அவனைப் பார்த்துப் பெற்ற தாயும் இரக்கப்படமாட்டாள் என்கிறார், அறம் கூறும் வள்ளுவர். எனவே நாளை, நாளை என்று கூறாது உடனே அறம் செய்க என்று கூறுகிறார். "அன்றறிவாம் என்னாதறம் செய்க மற்றது பொன்றுங்காற் பொன்றாத் துணை" என்பது குறள்.

இனி அறம்—அதை நாம் மறந்தால், அதற்கு மாறுபட்ட வழியில் நடந்தால் நம்மைத் தண்டிக்கும். அதன் வழி நடந்தால் நன்மை பயக்கும் என்றும் கூறுகிறார். 'அன்பிலதனை வெயில் போலக் காயுமே அன்பிலதனை அறம்' என்று கூறுகிறார். அறத்திற்கு எவ்வளவு ஆற்றல் என்று பாருங்கள்! அதுமட்டுமா 'மறந்தும் பிறன்கேடு சூழற்க! (நினைக்காதே!) சூழின் அறம் சூழும், சூழ்ந்தவன்கேடு' என்று அறம் பிறன்கேடு சூழ்பவனுக்குத்தான் கேடு நினைக்கும் என்கிறார். எனவே 'அஞ்சுவதோறும் அறனே, ஒருவனை வஞ்சிப்பதோறும் அவா' என்று அறத்திற்கு அஞ்ச வேண்டும், ஏனென்றால் ஆசை வஞ்சித்து அறத்தைக் கெடுத்துவிடும் என்கிறார். என்ன! என்று ஏளனமாக நினைத்தால் 'பிறர் நாணத்தக்கது, தான் நாணானாயின் அறம் நாணத்தக்கதுடைத்து' அதாவது பிறர் வெட்கப்படத்தக்க செயல்களைச் செய்துவிட்டுத் தான்மட்டும் வெட்கப்படாதிருந்தால் அவனைக் கண்டு 'அறம்' வெட்கப்படும் என்கிறார். எனவே அத்தகையவன் "அன்பு ஒரீஇத் (நீக்கி) தற்செற்று அறம் நோக்காது, ஈட்டிய ஒண்பொருள் கொள்வார் பிறர்" என்று கூறுகிறார். இத்தகையவன் அறவழி நடவாது அன்பின்றி, தன்னையும் அழித்துக்கொண்டு சிக்கனமாய்ச் சேர்த்து வைக்கும் பொருளைப் பிறர் கொள்ள அது சிதறிப்போய் விடும்! என்கிறார் வள்ளுவர்.

எனவேதான் 'அஞ்சுவதோறும் அறனே' என்றார். ஏன்? அறவழி தவறாமல் நடக்கவே! அதற்கு அறநூல் தேவை! இதோ என்றும் நின்று நிலவும் 'அறநூல்' குறள் நம்மிடம் இருக்கிறது என்றால் அதைக் கருத்திற்பதியவைக்கக் கறையை அகற்ற எண்ணற்ற இளைஞர் தேவை! அவர்களின் இதயத்திலே 'குறள் அறத்திற்கு'—வாய்மை ஒளிக்கு ஓர் இடம் தேவை! நாட்டின் பிற்கால நல் வாழ்வுக்காக! ஏற்படுமா?

(3ம் பக்கத்தொடர்ச்சி)

டொழுகலான், அந்தணர் என்போர் அறவோர்'' என்றார் வள்ளுவர். சிலர் அரசர்களையும், சிற்றரசர்களையும், பெருஞ்செல்வர்களையும் அண்டி வாழ்ந்து வந்தனர். சிலர் அங்கு மிங்கும் குடும்பத்துடனும் வாழ்ந்து வந்தனர். ஆனால், அவர்கள் பெரும்பாலும் காடுகளிலேயே வாழ்ந்து வந்தனர். முனிவர்கள் தங்கள் பத்தினிகளுடன் இலைக்குடிசையில் வாழ்ந்து வந்தனர் என்று புராண இதிகாசங்கள் கூறுதல் இவர்களையே யாம்.

சில ஆரிய முனிவர்கள் தமிழ் மொழியை ஒருவாறு கற்றும், தமிழ்க்கொள்கைகளைப் பின்பற்றியும் வந்ததோடு, ஒருவாறு ஆரியக் கொள்கைகளைப் புகுத்தியும் வந்தனர். 'விருந்தோம்பல்' என்னும் குணத்தைத் தமக்கே உரிமையாக்கிக்கொண்ட, அருளே உருவான பழந்தமிழ் மக்கள் அவர்களை அன்புடன் போற்றிவந்தனர். கி. பி. 17, 18-ம் நூற்றாண்டில் கிறித்துவ சமயப் பாதிரிமார்கள் தமிழகத்தில் எந்நிலையில் இருந்தார்களோ, அந்நிலையில்தான் அன்று அவ்வாரிய முனிவர்கள் இருந்துவந்தனர். ஆங்கில வீரமா முனிவர், போப்பையர் முதலியோர் தமிழைக் கற்றுத் தமிழ் இலக்கிய இலக்கண நூல்கள் செய்ததுபோலவே, அன்று அகத்தியன் முதலிய ஆரிய முனிவர்களும் தமிழ் கற்றுத் தமிழ் நூல் செய்தனர். ஆங்கில ஆட்சி இந்நாட்டில் ஏற்படும் முன்னரே மேனாட்டார் சமயத்தைத் தமிழ் மக்கள் தழுவினதுபோல, அன்று ஆரிய சமயத்தைத் தமிழர்கள் தழுவவில்லை. கள்ளங் கரவற்ற தமிழர்கள் அவ்வயல் நாடர் கூறிய பொய்யுரைகளை மெய்யென நம்பி வந்தனர். எடுத்துக்காட்டாக மண்ணுலகம் போலவே, வானுலகம் உண்டு என்றதை நம்பினர். இதை ஆசிரியர் தொல்காப்பியரே, வானாட்டில் வாழ்வோரும் மக்கள் போன்றாரே எனக் கொண்டு, அங்கும் அறம் பொருள் இன்பங்கள் நடக்குமென எண்ணி,

"இமையோர் தேஎத்தும் எறிகடல் [வரைப்பினும்
அவை அல்காலம் இன்மை யான"
(பொருள் 54.)

எனக் கூறுதலால் அறியலாம். தேஎ—இடம், நாடு. அவை—அறம் பொருள் இன்பம். தமிழ்ப் பெரியார்கள் ஆரிய முனிவர்க்குத் தமிழ் கற்பித்தும், ஆரிய மொழியை ஒருவாறு பயின்றும், அம்மொழியில் உள்ள சிலகதைகளையும், கருத்துக்களையும் தமிழ்ச் செய்யுட்களில் அமைத்துப் பாடியும் வந்தனர். ஆனால், அவை தமிழ்ச் சொற்களால், தமிழ் எழுத்துக்களால், தமிழ் இலக்கண முறைப்படி பாடப்பட்டுவந்தன. ஆரியரேயன்றிப் பல வேறு நாட்டினரும் வணிகத்தின் பொருட்டும், வாழ்க்கையின் பொருட்டும் தமிழ் நாட்டில் தங்கி வாழ்ந்துவந்தனர். அன்னார் மொழிச் சொற்கள் சிலவும் தமிழ் மொழியில் கலந்துவந்தன.

சமயத் தொண்டரும், கட்சித் தொண்டரும் பிறசமயக்கொள்கைகளையும், கட்சிக் கொள்கைகளையும் எடுத்துக்கூறி மறுத்து, தம் கொள்கைகளை நிலைநாட்டுதல் போலவே, தமிழர்களின் ஒழுக்க முறைபற்றி இலக்கணம் செய்த ஆசிரியர் தொல்காப்பியரும், அக்காலத்தில் தமிழகத்தில் தங்கியிருந்த ஆரியர் கொள்கைகளை எடுத்துக் கூறி மறுத்துவந்தனர். அவ்வாறன்றி, தொல்காப்பியம் ஆரியக் கொள்கை கூற எழுந்த நூலன்று. தொல்காப்பியத்தில் ஆரியக் கொள்கை ஒன்றும் இல்லை. முழுதும் தனித் தமிழ்க் கொள்கைகளே யாகும் என்பது இக் கட்டுரையால் விளங்கும்.

உரை

திருக்குறளைப் பரிமேலழகர் முதலிய உரையாசிரியர்கள் கெடுத்துக் குட்டிச்சுவராக்கியதுபோல, தொல்காப்பியத்தை நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்கள் கெடுத்துக் குட்டிச்சுவராக்கிவிட்டனர். இவ்வுரைகளினாலேதான் தூண்டாமணி விளக்காகிய தொல்காப்பியம் மாசுபடிந்த மணிபோல் மங்கி மதிப்பற்றுக்கிடக்கிறது. இவ்வுரைகள்தான் தமிழ்ப் புலவர் பட்டப் படிப்புப் படிப்போர்க்குப் பாடமாக வைக்கப்பட்டுள்ளன. 'நல்ல தமிழ் நூல்களையெல்லாம் தடை செய்யும் அரசினர், பரிமேழகர்உரையை ஏன் தடை செய்யாதிருக்கின்றனர்?' என்று, அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் அறிஞர் அ. சிதம்பரநாதனார் அவர்கள் கேட்டதுபோல, நச்சினார்க்கினியர் முதலியோர் உரைகளை ஏன் தடை செய்யாதிருக்கின்றனர்? என்று நாம் கேட்கிறோம். இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், கல்லாடர், தெய்வச்சிலையார் என்னும் அறுவரும் தொல்காப்பியத்திற்கு உரையெழுதியுள்ளனர். இவர்கள் அறுவரும் ஆரிய மறையிற் சமயம் (வைதிக மதம்) தமிழ் நாட்டில் நிலைபெற்ற காலமாகிய கி. பி. 9-ம் நூற்றாண்டுக்கும், 13-ம் நூற்றாண்டுக்கும் இடையில் இருந்தவராவர். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்ச் செய்யப்பட்ட ஒரு நூலுக்கு நாலாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு எழுதிய உரைதான் இன்று நமக்குக் கிடைத்திருக்கிறது. எனவே ஆசிரியர் கருத்துப்படி, தமிழ் மரபுப்படி எழுதப்பட்ட உரை நமக்குக் கிடைக்கவில்லை. பிற்காலத்து உரையாசிரியர்கள் பழைய உரையை அழித்துவிட்டனர். அவ்வுரையை அழித்ததோடு நில்லாமல் தங்கள் உரையாகிய நஞ்சையுங் கலந்துவிட்டனர். அந்நஞ்சைய கற்றி, ஆசிரியர் கருத்தறிந்து தொல்காப்பியத்திற்கு நல்லுரை காண்பது தமிழர் முன்னிற்கும் வேலைகளில் முதல் வேலையாகும்.

1941-ம் ஆண்டே தொல்காப்பியப் பொருளதிகார முழுமைக்கும், (665 சூத்திரங்கட்கும்) எளிய நடையில், தமிழ் மரபுப்படி விளக்கவுரை யொன்று 1100 பக்கங்களில் எழுதி முடித்தேன். பொருளிலாக் குறையால் தமிழர்க்குப் பயன்படாது எட்டாண்டுகளாகப் பெட்டிக்குள் வைத்தது வைத்தபடி இருக்கிறது அவ்வுரை. அவ்வுரையைத் தழுவியே இவ்விளக்கம் எழுதப்படுகிறது.

[பின்னர்]

—( )—

கம்பம், புதுப்பட்டியில். கழகம்.

புதுப்பட்டி. மார்ச் 6.

இன்றுமாலை 6 மணிக்குதோழர் கே. கிருட்டினசாமி தலைமையில் கூடிய பொதுக்கூட்டத்தில் தோழர்களான வி. காமராஜ், தலைவர்; மகமதுமீரா, துணைத் தலைவர்; முத்துக்கிளி, பொருளாளர்; முனியப்பன், செயலாளர்; ரங்கசாமி, துணைச் செயலாளர் ஆகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

[இதன் நினைவாக வந்த ரூ 1-ம் வரப்பெற்றோம். நன்றி! ஆ—ர்]

"டில்லி ஜமீன்தாரி"

★

ஸ்காட்லாந்தியன் திடீரென்று சிரிப்பானாம். என்னப்பா! பைத்தியமா உனக்கு, தானாகவே சிரித்துக்கொள்ளுகிறாயே என்று கேட்டோமானால் 'இல்லை, நேற்று என் நண்பன் ஒரு சங்கதி வேடிக்கையாகச் சொன்னான். அதிலுள்ள நகைச்சுவை நுணுக்கம் இப்பொழுதுதான் எனக்குப் புரிந்தது. அதனால் தான் சிரிப்பு வந்தது, என்பானாம். இம்மாதிரி ஸ்காட்லாந்தியனுடைய, சொன்னவுடனே புரிந்து கொள்ளாது அடுத்த நாள் உணர்ந்து கொள்ளக்கூடிய குணத்தைப்பற்றி ஆங்கிலத்தில் சொல்வதுண்டு.

நம் நாட்டிலும் அந்த மாதிரி ஸ்காட்லாந்தியர் இருக்கத்தான் செய்கிறார்கள். அங்கேயாவது நகைச்சுவை நுணுக்கத்தை சற்று கூர்ந்து கவனித்தால் தான் புரிந்து கொள்ள முடியும். இங்கேயோ சாதாரண விஷயங்களை எவ்வளவுதான் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டி விளங்க வைத்தாலும் புரிந்து கொள்ளவே மாட்டார்கள். புரிந்து கொள்ளாதது மட்டுமல்ல, சொல்பவனை ஏசியும் செல்வார்கள் மறுக்க இயலாத நிலையினால். அவர்களே உணருங்காலம் வரும் பொழுது மெல்லவும் மாட்டாமல் விழுங்கவும் மாட்டாமல் திணறும் காட்சி பரிதாபகரமாக இருக்கும்!

சென்ற வாரம் சட்டசபையில் கேள்வி யொன்றுக்குப் பதிலளித்த அமைச்சர் சொன்னார், 'எஃகுத் தொழிற்சாலை யொன்றை மத்திய சர்க்கார் வடமாகாண மொன்றில் நிறுவ உத்தேசித்திருக்கிறது. அதை சென்னையில்தான் அமைக்கவேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறோம். மேலும் கண்டிப்பாக எடுத்துச் சொல்வோம்' என்று. திராவிடக் கழகத்தினர்தான் குறுகிய நோக்கங்கொண்டவர்கள். எதற்கும் எங்கள் நாடு, எங்கள் மொழி, எங்கள் மக்கள் நலன் என்று சுயநலப்போக்கில் பேசுபவர்கள்! அமைச்சரும் அவர் சார்ந்துள்ள கட்சியும் அப்படியில்லையே. அகண்ட இந்தியா, பாரத மக்கள், பெரும் பான்மையினர் பேசும் இந்தி எனறெல்லாம் அகன்ற கண்ணோட்டமும் பரந்த பார்வையுங் கொண்டோருக்கு என் இந்த குறுகிய மதி! இந்த பிரிந்த இந்திய மாநிலத்தில் எங்கு நிறுவினால் தானென்ன தொழிற்சாலையை! எல்லாம் நம் இந்தியா தானே!

முன்பெல்லாம் அமைச்சர் அப்படித்தான் இருந்தார். பாவம் இப்பொழுது அவருக்கு திராவிட கழகத்தினர் வெகு நாளாகச் சொல்லி வந்த நுணுக்கம் புரிந்துவிட்டது! அதுதான் மத்திய சர்க்காரை வற்புறுத்துகிறார்! ஆனால் மத்திய சர்க்காரின் கொள்கையை இவர் இன்னும் புரிந்து கொள்ளாதது மாதிரி ஏன் வற்புறுத்துகிறார்? மேலிட சர்க்காரின் கொள்கையே, இந்தியாவின் அகன்ற பாகத்தில் தான் எல்லா வசதிகளையும் செய்து வளம் படுத்துவதென்பதாச்சே! தென்னிந்தியாவோ குறுகலாக இருக்கிறது, நாளை வங்காளக்குடாக்கடலும் அரபிக்கடலும் ஒன்றை ஒன்று நெருங்கி தென்னாட்டை மூழ்கடித்து விட்டால் என்ன செய்வது என்று தான் முன் ஜாக்கிரதையாக எல்லாத் தொழில் நிலையங்களையும் வடநாட்டிலேயே நிறுவிக் கொள்கிறார்கள்போலிருக்கிறது!

தவிர, 8—3—49-ல் நிதி மந்திரி சென்னை சர்க்காருக்கும் மத்திய சர்க்காருக்கும் நிதி பற்றிய உறவு நிலைமையைக் குறித்து சில புள்ளி விவரங்கள் கொடுத்திருக்கிறார்.

1947—48-ல் சென்னை சர்க்காரிடமிருந்து மத்திய சர்க்கார் வசூலித்த தொகை ரூ. 29 கோடியே 12 லட்சம்.

1948 எப்ரலிலிருந்து டிசம்பர் முடிய வசூலித்தது ரூ. 22 கோடியே 99 லட்சம.

ஆனால், மத்திய சர்க்கார் சென்னைக்கு வருமான வரியில் அளித்த தொகை ஒவ்வொரு வருஷமும் 6 கோடியே 85 லட்சம்.

இதைத் தவிர புகையிலையின்மீது 4 கோடி ரூபாய் வசூலித்துக்கொண்டு 22 லட்சத்தை சென்னைக்குத் தருகிறது.

வெகு கசப்பான உண்மை, காங்கரஸ் தோழர்களுக்கு. திராவிடநாடு பிரிவினையின் உயிர் நாடி இதுதானஎன்பதை இந்தப்புள்ளி விவரங்களைப் பார்த்த பிறகாவது உணராவிட்டால் காங்கரஸ் தோழர்களுக்கு உள்ளபடியே தங்களது உடலில், இரத்தத்தில் மான உணர்ச்சியே இல்லை என்று தான் முடிவு கட்டவேண்டும.

அவர்களையே கேட்கிறோம். அவர்களால் ஒழிக்கப்படவிருக்கும் ஜமீன்தாரி முறையைவிட மோசமானதாக இல்லையா இது என்று. சர்க்காருக்கு ஒரு குறிப்பிட்டதொகையை அளித்து விட்டு ஜமீன்தார்கள் உழவர்களிடமிருந்து எவ்வளவு வேண்டுமானாலும் வசூலித்துக்கொள்ளலாம். இது ஜமீன்தாரி முறை. இந்த ஈவு இரக்கமற்ற செய்கைக்கு முடிவுகாண வேண்டித்தான் ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டம் கொண்டுவந்ததாகும். ஆனால் அதே போல் 'மற்றொரு ஜமீன்தாரி முறை—அதுதான் டில்லி ஜமீன்தாரி—இருக்கிறதே அதைப் பற்றி ஏன் காங்கரஸ் கட்சியினர் தங்கள் நாவுக்கு 144-போட்டிருக்கின்றனர்? சிந்திக்க வேண்டாமா?

கரடு முரடான காட்டை வெட்டிச் செதுக்கி, உழுது விளைத்து நீர் பாய்ச்சி எரு விட்டு பயிரைக் கட்டிக் காத்து நன்றாக விளைந்ததும் மணி

[4ம் பக்கத் தொடர்ச்சி]

கன் புறப்பட தயாராக வீட்டு வாசலின்முன் காரைக்கொண்டு நிறுத்தினான். பிள்ளையும் சாயங்கால டிபனை முடித்து விட்டு வண்டியில் போய் ஏறினார். கார்புறப்பட்டது. இடைப்பட்ட ஊர்களையெல்லாம் தாண்டி குழித்துறையை நெருங்கியது. "ஸ்டாப்" என்று அந்தப் பழைய சப்தம் கேட்டது. காரணமில்லாமல் பிள்ளைக்கு முதலில் நெஞ்சுபடபடத்தது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு காரை நிறுத்தச் சொன்னார். சொக்கன் காரை நிறுத்தினான். சோதனை நடந்ததுபோலீஸாரால். உள்ளே பார்த்துவிட்டு பின்பக்கம் மூடியை திறந்தனர்! சபாபதிபிள்ளை திகைத்தார். திகிலடைந்தார். கண்களை மூடி மூடி திறந்தார். அவர் கண்களை அவராலேயே நம்பமுடியவில்லை. டிரைவரைப்பார்த்து விழித்தார். அவர்பார்வை அந்த ஒரு மூட்டை அரிசி எப்படி வந்தது என்று கேட்பது போலிருந்தது. நடக்க வேண்டியதெல்லாம் முறைப்படி நடந்தது. முடிவு பிள்ளையும் சொக்கனும ஒரே சிறையிலே தள்ளப்பட்டனர். பிள்ளை சொக்கனைப் பார்த்து ஏக்கத்துடன் என்ன காரியம் செய்துவிட்.........? என்ற கேள்வியை முடிப்பதற்கு முன், சொக்கனின் கை அவன் தாடியின்மேல் சென்றது! சொக்கன் கையில் தாடி! பிள்ளை பார்த்தார். பதைத்தார்! ராஜு! அவர் கண்கள் இருண்டது. தலை சுழன்றது. தரையிலே சாய்ந்தார். வாய் மட்டும் முணு முணுத்தது "பழிக்குப் பழி" என்று.

அறுத்து மூட்டை மூட்டையாக மிராசுதார் வீட்டுக்கனுப்பி விட்டு, தன்னுடையவும் தன் குடும்பத்தினருடையவும் வயிற்றை நிரப்ப அரைப்படி, ஒரு படி நெல்லுக்கு ஆண்டையின் முகத்தை அண்ணாந்து நோக்கும் அவல நிலையை விடக் கேவலமாக அல்லவா உள்ளது, நம் மாகாண அரசினர் நிலை. ஏன் இந்த ஒரு படி மிளகு கொடுத்துவிட்டு ஒளிந்திருந்து ஒரு வாய் ரசத்திற்கு காத்துக் கிடக்கவேண்டும்?

வடநாட்டு ஆதிக்கம் நிறைந்த மத்திய சர்க்கார் சென்னை மாகாணத்தின் மீது பாரபட்சமாக நடந்து கொள்ளுகிறது. திராவிடகழகம் இந்த உண்மையைச் சொன்ன போது அதெல்லாமில்லை, வீண் பழி சுமத்துகிறார்கள் வட நாட்டின் மீது, என்று தூற்றிய அதே நாவினால் சொல்லுகிறார்கள் இப்பொழுது, சென்னைக்கு 18 சத விகிதமும் மத்திய மாகாணத்திற்கு 19 சத விகிதமும் வருமான வரியில் பங்களிக்கப்படுகிறது என்று. மந்திரி முன்மாதிரியில்லாமல் மத்திய சர்க்கார் பிரதிநிதியை மத்திய மாகாணத்துக்கு வெண்ணெயும் சென்னைக்கு சுண்ணாம்பும் ஆன இந்தப் பாரபட்ச முறைக்குக் காரணமும் கேட்டாராம். ஆனால் அந்தப் பிரதிநிதி 'திருப்திகரமான பதில்' கூறவில்லையாம். திருப்திகரமான பதில் கூறவில்லை. விளக்கமாகச் சொன்னால் தட்டிக் கழித்துவிட்டார். வேறென்ன செய்வார் அவர்!

வெளிப்படையாகச் சொல்லியிருப்பதானால் இப்படித்தான் சொல்லியிருப்பார். அதாவது இன்னும் உங்கள் மாகாணத்தவருக்கு தன் மானம், விடுதலை நோக்கம் முதலியன வரவில்லையே. நன்றாகச் சொன்னால் நல்ல புத்தி தோன்றவில்லையே. அதனால் அவ்வளவுதான் அளிக்கப்படும் என்று சொல்லியிருப்பார்.

ஒரு சட்டசபை உறுப்பினர் கேட்டும்விட்டார். 'ஏன் மத்திய சர்க்கார் சென்னை சர்க்காரிடம் ஓர வஞ்சனையாகநடந்துகொண்டிருக்கிற' தென்று. திராவிடர் கழகம் திராவிட நாடு கேட்கும்பொழுதெல்லாம் கூறிய காரணங்களைக் கண்டு கேலி பேசி மறுத்தவர்கள்தான் இப்பொழுது ஓர வஞ்சனை, பாரபட்சம் என்று சொல்ல முன் வந்திருக்கிறார்கள். நாட்டைத் துண்டு போடச் சொல்லும் நய வஞ்சகர்கள், வடநாடு தென்னாடு என்று பேசிப் பகைமை வளர்க்கும் வம்பர்கள், நம்பாதீர்கள் அவர்கள் பேச்சை, நாமெல்லாம் பாரதமாதாவின் புத்திரர்கள், கொஞ்சநஞ்சமுள்ள வேற்றுமையை விரட்ட ஏக், தோ, தீன் படியுங்கள் என்றுரைத்த தென்னாட்டு தேசாட்லாந்தியர்களுக்கு உண்மை இப்பொழுதாவது புரிந்ததே என்பதில் நமக்கு மகிழ்ச்சி.

நிதி விஷயம் மட்டுமல்ல, உணவு விஷயத்தைப் பற்றியும் அதே கூக்குரல்தான். உணவு அமைச்சர் டாக்டர் ராஜன் நமக்குத் தலைக்கு 12 அவு. வீதம் தேவையான உணவுப் பொருள் 7,60,000 டன்னுக்குப் பதிலாகமத்திய சர்க்கார் 4-லட்சம் டன்கள்தான் ஒதுக்கியிருக்கின்றனர் என்று கூறினார்.

மத்திய சர்க்கார், சென்னை சர்க்கார்—வடநாடு தென்னாடு என்ற பிளவு நிச்சயம் உண்டு என்பதை இனிமேல் அவர்கள் மூடிவைக்க முடியாதபடி ஆகிவிட்டது. புண்ணை எத்தனை நாளைக்குத் துணியைச் சுற்றி மூடிக்கொண்டு ஒன்றுமில்லை என்று சொல்லமுடியும். சீழும், இரத்தமுமாக துணியிலேயே கறை படிந்துவிட்டபோது இனியும் புண்ணில்லை என்று கூறிவிடமுடியுமா? பெருமூச்சுடனாவது உள்ளதை ஒப்புக்கொண்டு தானாகவேண்டும். இந்தப் பெருமூச்சு தான் நாளை வரும் பெரும் புயலுக்கு அடிப்படை. ஆக, அறிகுறி என்னமோ தோன்றிவிட்டது. அந்த அளவில் நமக்குப் பெரும் வெற்றி.

நோய் இருப்பது அவர்களுக்குத் தெரிந்துவிட்டபடியால் அடுத்தபடி வைத்தியம்தான். அதுதான் ஈரோட்டு வைத்தியர் கண்ட திராவிட நாட்டுப் பிரிவினைக் குளிகையும் பிராமணீயப் பத்தியமும். குளிகை கசப்புத்தான். நோய் தீரவேண்டுமானால் கசப்பைப் பாராது உட்கொண்டுதான் ஆகவேண்டும்.

திராவிட நாட்டுப் பிரிவினைக் கோரிக்கையை இன்றும் உணராதிருப்போர் இருக்கின்றனர்பலராக ஆதலால் தான் சென்னை மாகாணத்து மக்கள் மத்திய சர்க்காரால் அளிக்கப்படும் குறைந்த வீத உணவை உட்கொள்ள வேண்டிய கட்டாய நிலையுள்ளது மட்டுமல்ல, மேலும் மேலும் வரிப் பளுவைத் தாங்கி வேதனைப்படும் நிலையும் இருக்கிறது. புகையிலை வரியாக மத்திய சர்க்கார் வசூலிக்கும் 4 கோடி ரூபாயையுமே சென்னைக்கு கொடுத்தால் இந்த பட்ஜெட்டில் ஏற்பட்ட பற்றாக் குறையை நிறைவு செய்திருப்பேன் என்று மந்திரியே கூறியிருக்கிறார். திராவிட நாட்டு மக்களுக்கு உணர்ச்சி வருவதற்காக இதுமாதிரி இரட்டிப்பு வரிகள் அபராதம் போன்றது. அவர்களுக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும். ஒரு எழுபதாண்டுக் கிழவர் படும் பாட்டைக் கவனியாது, அவரது சொல்லை உணராதிருப்போருக்குத் தண்டனையில்லாமல் போனால் அது சரியாகுமா?

''சம்மட்டியார்''

(2ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த உலகத்து மனிதனேயல்லாது மானிட உருவத்திலே வந்த மகேசுவரனல்ல என்பதையும் நன்கு அறிவார். கற்பற்றவள்தான் சீதை எனவும் சர்வகலாசாலை உப அத்தியட்சகர் அறிவார்; இன்பத் தமிழ் பாடி, மன்பதையிலே மங்காத புகழோடு, நீங்காத பெருமையோடு ஆண்டிருந்தான் தென்னிலங்கை வேந்தன் என்ற வரலாறு அவரறியாததா? பொருந்தாத பொய்க் கதை இராம சரிதை; புல்லர்களின் கள்ள மனத்திலேயிருந்து குதித்தெழுந்ததே இராமாயணம் என்பதை அறியாரோ? அறிந்தும், தெரிந்தும், அறிஞர் பட்டம் பெற்றும் ஒப்புக் கொண்டாரென்றால், ஆச்சரியம்தான்.

ஆனால் ஒன்று உறுதி. ஆங்கிலத்திலே அரியின் அவதார மேன்மையைப் புகழ்ந்து கூறினால் உலகம் நகைக்கும் அவரின் செயலைக் கண்டு. ஆங்கில இராமன் நிச்சயம் அயோக்கியன் என்றுதான் பட்டம் பெறுவான். அதிலேதும் சந்தேகமில்லை. அவர்கள் பட்டினியால் வாடிய மக்களைப் புரட்சிக் கடலிலே குதிக்கச்செய்த வால்டேரையும், ரூஸோவையும் படித்தவர்கள்; இன்பம் ததும்பிடும், ஆனால் அருமையான கருத்துக்களை அள்ளிக் கொடுக்கும் ஷெல்லிகளை, ஸேக்ஷ்பியர்களை, மில்டன்களை, பைரன்களை, வெல்ஸ்களைக் கண்டவர்கள். பிராட்லா பிறந்தது அங்கே; இங்கர்சால் வாழ்ந்ததும் அங்கேதான். மார்டின் லூதரும், விக்லிப்பும் வாழ்ந்ததும் அந்த நாடே. அந்த அய்ரோப்பாவிலே, அறிவுக்கு முதலிடம் தரும் அறிஞர்களின் நாட்டிலே, அவனியிலே வருணாச்சிரம அதர்மத்தை நிலைநிறுத்தவே ஏற்பட்ட இவ்விதிகாசம் நிச்சயம் செல்வாக்கிழக்கும்; சிரிக்கும் நிலை உண்டாக்கும். ஆகவே அறிஞர்களே! அனாவசியமான, அவசியமற்ற பணியிலே ஈடுபட்டு, இருக்கிற பெயரை அழித்துக்கொள்ளவேண்டாம். நாட்டின் முன்னேற்றத்திற்கு உழையுங்கள்! நாட்டிற்கும் நலம், உங்கள் வீட்டிற்கும் நலம். பேசுதற்கும் உரிமையற்றவர்களாய், ஊமைகளாய் நாட்டு மக்களை வைத்திருக்கும் கேட்டினைத் திருத்துங்கள்! சதிகள் குறையும். அன்பு காத்த உத்தமன் காந்தி கூறிய பொன்மொழிகளைப் போற்றி நடைமுறையிலே கொண்டுவாருங்கள்! வாழ்வோம் வளமாக, தாளமாட்டோம் நிச்சயமாக என்று கூற ஆசை. ஆனால் ஏற்பீரோ? ஏற்க உம்சூழ்நிலைசும்மாயிருக்குமோ? மாறுமா மந்த புத்தி; மடியுமா மூடநம்பிக்கை, வருமா நல் வாழ்வு. எதுவோ தெரியேன் இச் சிறியேன்.

—மு. சுப்பையன்.

ரோஜா முத்தையா

வளரும் சக்தி!

★

நிலத்தைத் திருத்திப் பண்படுத்திப் பயிர் செய்து உணவுப் பொருள்களை உற்பத்தி செய்கிறவன் உழவன். ஆனால் அவனோ இடுப்பில் கட்டிய கந்தையுடன் கால் வயிற்றுக் கஞ்சியுடன் காலங் கழிப்பான். கண்டோர் வியக்க மாளிகைகளையும் உப்பரிகைகளையும் அதி அற்புதமாகக் கட்டிக் கொடுப்பவன் தொழிலாளி. ஆனால் அவன் உறங்குவதோ மழை நீரால் கரைந்து நிற்கும் களிமண் சுவர்களுக்கிடையே, பிரிந்து கிடக்கும் கூரைக்கு அடியிலே. பாறை வெடிப்புக்கும் மணலின் சரிவுக்கும் அஞ்சாது பூமியிலிருந்து தங்கம் வெட்டி எடுப்பவன் தொழிலாளி. ஆனால் தன் அருமை சேய்க்குத் தங்க நகைகளை அணிவித்து அழகுபார்த்து அகமகிழ முடிவதில்லை அவனால்.

சமூகத்தின் இந்தச் சீர்கெட்ட நிலையைக் கண்டு சிந்திக்கத் தொடங்கினார் ஒரு மனிதர். 'மார்க்கமில்லையா இந்த மானங்கெட்ட நிலையை மாற்ற' என்று மனம் வெதும்பினார் அவர். இரவு பகலாக இருந்து ஆராய்ந்தார். உறக்கமின்றி உழைத்தார் உழைப்பாளிகள் நல்வாழ்வு வாழ வழி வகுப்பதில். உழைப்பாளிகள் உல்லாசமாக வாழக்கூடிய, உழுத்தர்கள் வாழ உரிமையற்ற, பகுத்தறிவு உள்ள மனிதர்கள் அனைவரும் சம அந்தஸ்தில் வாழக்கூடிய, பலசாலி, பலத்தில் குறைந்தவன், அறிஞன், அறிவில் குறைந்தவன் என்ற வித்தியாசங்களைத் தவிர வேறெந்தவிதமான ஏற்றத் தாழ்வுகளையும் காணமுடியாத ஒரு புது உலகை மக்களிடம் காட்டினார் அந்த மனிதர். அவ்வுலகத்தைச் சென்றடைவதெப்படி என்று ஏக்கத்துடன் கேட்டனர் மக்கள். இதோ இந்தப் பாதையின் வழியாக என்று வழி காட்டினார் அவர். அப்பாதை தான் மார்க்கீசம். வழி வகுத்துக் கொடுத்த அந்த மகா புருஷர்தான் கார்ல் மார்க்ஸ்.

உழைப்பாளிகளின் உதிரத்தை உறுஞ்சி ஊனை வளர்க்கும் ஊதாரிக் கூட்டத்தை முற்றிலும் ஒழித்துக் கட்டவேண்டும் முதலில். பின்பு வர்க்க பேதமற்ற சமுதாயத்தை நிர்மாணித்து அதில் உழைப்பாளிகளின் ஆட்சியை நிலைநிறுத்தவேண்டும். இதுதான் மார்க்ஸ் காட்டிய மார்க்கம்—மார்க்ஸ் காட்டிய மார்க்கம் நடைமுறைக்கு உகந்ததுதான்என்பதை, உலகிற்கு நிரூபித்துக் காட்டினார் லெனின் ருஷிய தேசத்தில் புதிய சமுதாயத்தை உருவாக்கியதன்மூலம். சாலா காலத்தில் மத்திய, தென்கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் அந்தச் சாயல் படிந்தது. ஜனநாயக நாடுகள் உருவாகின.

'பாட்டாளி மக்களின் வறுமை நோயைத் தீர்க்க வல்லது ஜெர்மன் விஞ்ஞானி மார்க்ஸ் கண்டுபிடித்த மார்க்கீஸ சஞ்சீவியே' என உத்தரவாதம்கூறுகின்றனரஷ்யாவும், மத்திய தென் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும். ஒவ்வொரு தேசத்திலுமுள்ள அறிஞர்களும் தத்தம் நாடுகளில் பட்டினி நோயைப் பறக்கடிக்கும் வறுமை நோயை வராது தடுக்கும் அற்புத பெற்றியமைந்த அருமருந்தன்ன மார்க்கீஸத்தை மக்கள் அறிந்து கொள்ளும்படி செய்தனர்—செய்து வருகின்றனர். அறிஞர்களின் பிரசாரம் அபத்தமாகிவிடவில்லை. ஓரளவு வெற்றிக்கு அடிகோலியிருக்கிறது என்பதை அண்டை நாடுகளை நோக்கும்பொழுது நாம் அறிந்து கொள்ளமுடிகிறது.

அழியாப்பொருள்!

★

இந்த உலகத்தில் தோன்றிய ஒவ்வொரு பொருளுமே, காலத்திற்குக் காலம் மாறும்; உருத் தெரியாமல் குலைந்தொழியும். ஆனால் காலத்தால் மாறுபடாமல், உருக்குலைவின்றி என்றும் நிலைத்து நிற்கும் பொருள் ஒன்றே ஒன்றுதான். அது என்ன தெரியுமா? அதுதான் தன்னையே கொடுத்தாயினும், பெற்றுவிடும், தன்னிகர் அற்ற புகழ்.

"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பது ஒன்று இல்"

திருவள்ளுவர்.

மக்களைச் சுற்றியிருந்த மாயத்திரை அகன்று வருகிறது. பணக்காரனாகப் பிறப்பதும், ஏழையாகப் பிறப்பதும் பகவான் செயல்—ஆண்டனாக வாழ்வதும், அடிமையாக வாழ்வதும் அவன் செயல்—அவனன்றி அணுவும் அசையாது. இவற்றையும் இவை போன்ற போலித் தத்துவங்களையும் நம்பிக் கிடந்த ஏழை மக்கள், கட்டுக் கதைகளைக் கட்டி வைத்ததும், கடவுள்பால் தங்கள் கவனத்தையும் கருத்தையும் திருப்பியதும், அவைகள் எல்லாம் என்றென்றைக்கும் தங்களை நிரந்தர அடிமைகளாக கால்களுக்கடியில் போட்டுக் கசக்குவதற்காகக் கயவர் கூட்டம் செய்த சூழ்ச்சிதான் என்பதை உணர்ந்து வருகின்றனர். உழைப்பாளிகள் தங்கள் சக்தியை உணர்கின்றனர். உலகில் தொழிலாளரியக்கம் வளர்ந்து வருகிறது. வளரும் சக்தியைக் கண்டு அச்சம் கொண்டு அலறுகிறது உலக முதலாளித்துவம். 'விட்டோமா பார்' என்று வீராப்புப் பேசி ஆர்ப்பாட்டம் செய்கிறது, சவக்குழிநோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் சுரண்டும் முதலாளித்துவ வர்க்கம்.

சரித்திர ரீதியாக உலக முதலாளித்துவம் செத்துக் கொண்டு வருவதை இனி ஆராய்வோம். முதல் மகாயுத்தத்தின் முடிவின்போது, ரஷ்ய நாட்டில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த புரட்சி நடந்தது. தண்டவாளத்தைப் பெயர்த்தும் தபாலைக் கொளுத்தியும், தந்திகளை அறுத்தும், முடிவில் ஆண்டு கொண்டிருந்தோரால் அடக்கப்பட்டதுமான இந்திய ஆகஸ்டு புரட்சியைப் போன்றதல்ல அது! எஃகு உள்ளம் படைத்த வீரவாலிபர்கள் தங்கள் உயிரைப் பணயமாக வைத்துப் போராடின போராட்டம். திட்டமிடப்பட்டு தீவிரமாக நடத்தப்பட்ட புரட்சி. உலக சரித்திரத்தில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய புரட்சி. புரட்சியின் விளைவு—இடிபட்ட சுவர் போலே கவிழ்ந்தான். ருஷிய தேசத்தில் புதிய உலகம் தோற்றமளித்தது. அதுவரை உலகில் எங்கும் அமுலிலிருந்த ஒரே சமூக அமைப்பு முறை முதலாளித்துவ முறைதான் என்ற நிலைமை மாறிற்று. புதிய சமூக அமைப்பு ஏற்பட்டுவிட்டது. உலக முதலாளித்துவ வர்க்கத்திற்கு ஏற்பட்ட முதல் அங்கச் சிதைவு. ஆனால் தொழிலாளரியக்கம் புது மெருகு பெற்றது. இரண்டாவது உலக மகாயுத்தம் ஆரம்பமாகியது. அண்டைநாடுகளை கபளீகரம் செய்து கொண்டு வந்தான் வெறியன் ஹிட்லர். சோவியத்யூனியனையும் சுவைபார்த்து விடுவான், நமது சுகவாழ்வு இனி குன்றாது என்று எண்ணி உள்ளூரச் சிரித்துக் கொண்டது உலக முதலாளித்துவம். ஜெர்மனியிலும் தனது படை வலிமைக்குப் பணிந்த மற்றைய நாடுகளிலும் பாசிஸ்டு வெறியன் ஹிட்லர்

தொழிலாளரியக்கத்தையும், ஜனநாயக இயக்கத்தையும் நசுக்கி விடுவான் என்று நம்பினார்கள், பிரிட்டன் பிரான்சு போன்ற நாடுகளிலுள்ள ஏகாதிபத்திய வாதிகள். அந்த நம்பிக்கைதான் அவர்களை மூனிச்கொள்கையை கடைபிடிக்க செய்தது. ஆனால் யுத்தத்தின் முடிவு அவர்கள் முகத்தில் கரியைப்பூசிற்று. தொழிலாளர்களின் சக்தி சர்வதேச பாசிஸ்டு பிற்போக்குச் சக்தியை தவிடுபொடியாக்கியது. முதலாளித்துவ வர்க்கத்தின் நம்பிக்கை தளர்ந்தது. ஆனால் தொழிலாளர் சக்தி வளர்ந்தது வலுப்பெற்றது. 2-வது உலக மகாயுத்தத்தின் விளைவாக மத்திய தென்கிழக்கு அய்ரோப்பிய நாடுகளில் ஜனநாயக அரசாங்கங்கள் உதயமாகின. இவ்வாறாக உலக முதலாளித்துவத்தின் ஒவ்வொரு அங்கச் சிதைவும் உலக தொழிலாளரியக்கத்தின் ஒரு பிடி வளர்ச்சியாக அமைந்தது.

யுத்த காரணத்தினால் முதலாளித்துவ ஏகாதிபத்திய வல்லரசுகளில் ஜெர்மனி ஜப்பான் இத்தாலி ஒழிந்தன. பிரிட்டனும் பிரான்சும் லொடலொட்டையாகி விட்டன. அமெரிக்கா ஒன்று மட்டும் பல மடைந்தது. யுத்த காலத்தில் அமெரிக்கா சற்று விவேகத்துடன் நடந்து கொண்டது. ஏமாளித்தனமாக நடந்து கொண்டு ஏழ்மையைப் பெருக்கிக் கொண்டன பிரிட்டனும் பிரான்சும். எனவே பிரிட்டனும் பிரான்சும் அமெரிக்காவின் கையை எதிர்பார்த்து வாழும் நிலையை எய்தி விட்டன. பணத்திமிர் கொண்ட அமெரிக்கா தனது விஸ்தரிப்புக் கொள்கையை ஆதரிக்க பிரிட்டனையும் பிரான்ஸையும் தலையாட்டிப் பாவைகளாக ஆக்கி வைத்துக் கொண்டு, உலக அரங்கில் தான்தோன்றித்தனமாக நடந்து வருகிறது. உலக ஆதிக்கத்திற்குக் கோட்டைகட்டும் அமெரிக்கா, முதலாளித்துவத்தை நிலை நிறுத்துவதற்கும் ஜனநாயக வீழ்ச்சிக்கும் பாடுபடுகிறது என்பதை எவரும் மறுக்க முடியாது. அமெரிக்காவின் இந்த கெட்ட எண்ணம் உலக முதலாளித்துவத்தின் அழிவு வெகு தூரத்திலில்லை என்பதையே காட்டுகிறது. தொழிலாளரியக்கத்தை நசுக்கி விடலாமென்று கருதுவது நிர்மூடத்தனம், ஏன்? அது வளரும் சக்தி. வளரும் சக்தி எங்கும் வளரும். ஆம். திராவிடத்திலும் தான். திராவிடநாடு இன்னும் அடிமை நாடாகவே இருந்துவருகிறது. அடிமை வாழ்வை அறுத்தெறிவதுதான் நமது முதல் வேலை. வடநாட்டுப் பிடி திராவிடத்தை விட்டு நீங்கியதும் வளரும் சக்தி சமதர்ம ஆட்சியாக மலரும். திராவிட நாட்டில் முதன்முதலாக சமதர்ம வித்திட்ட ''தென்னாட்டு லெனின்'' பெரியார் ராமசாமி நமது ஒப்பற்ற தலைவராகவும்,

''கிளியை விடுத்துக் கிளர்ந்தெழுவார் இனிக்
கெஞ்சும் உத் தேசமில்லை—சொந்த
வலியுடையார் இன்ப வாழ்வுடையார் இந்த
வார்த்தைக்கு மோசமில்லை.''

என்று தொழிலாளருக்கு இருக்கும் வலுவினை எடுத்துக்காட்டி, தொழிலாளர் தங்கள் சொந்த வலிமையால், உரிமையான இன்ப வாழ்வை அடைந்தே தீருவர் என்று உறுதி கூறும் புலவர், திராவிடத்தின் புரட்சிக் கவிஞராகவும் திகழும் பொழுது திராவிடத்தில் சமதர்மம் மலரும் என்பதில் சந்தேகமிருக்கமுடியுமா?

—மா. முருகன்.

தவக்கோலம் தந்த நினைவு!

பசியைப் போக்க பறந்து திரிந்துபார்க்கும் பறவை இனம் பசுமையைக் கண்டு பாய்ந்து இறங்குகின்றன. பசுமையின் மறைவில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் வலையோ, அவற்றின் கண்ணுக்குத் தெரிவதில்லை. முடிவு என்ன? வேட்டுவனின் வேட்கைக்கு அவை பலி!

இக்காட்சி மற்றொரு முறை என் நினைவுக்கு வந்தது. அது எப்போது தெரியுமோ?

சமுதாயக் கோளாறால் சஞ்சலமடைந்த மனித இனத்தை, சமயம் (மதம்) என்ற பசுமையைக் காட்டி, தவவேடம் என்கிற வலையில் வீழச்செய்து, தகாத வழியால் மக்களின் அறிவையும், பொருளையும் தட்டிப் பறித்துக்கொண்டு, அவர்களைத் தனக்குப் பலியாக்கிக் கொள்ளுவார்களே; அந்த மனிதப்பிண்டங்களைப் பார்க்கும் போது.

''தவம்மறைந்து அல்லவை
செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள் சிமிழ்த் தற்று''

திருவள்ளுவர்.

குடி அரசுப்பதிப்பக வெளியீடுகள்.

தத்துவவிளக்கம்	0	12	0
இந்தியாவின் குறை பாடுகள்	0	8	0
பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க்கை வரலாறு. (ஆங்கிலம்)	0	8	0
நமக்கு வேண்டியது எது? சமதர்ம ராஜ்யமா? சுயராஜ்யமா?	0	6	0
கர்ப்ப ஆட்சி	0	6	0
பெரியார்பெருந்தொண்டு	0	6	0
வெளியேறு	0	6	0
கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?	0	5	0
பகுத்தறிவு அல்லது மரணசாஸனம்2ம்பாகம்	0	4	0
வால்டையரின் வாழ்க்கைச் சரிதை	0	4	0
கார்ல் மார்க்ஸ்	0	4	0
சமதர்ம உபன்யாசம்	0	4	0
அப்பரும் திருஞான சம்பந்தரும்	0	3	0
சோஷியலிசம்	0	3	0
இலங்கை உபன்யாசம்	0	3	0
இராமாயணப் பாத்திரங்கள்	0	3	0
மேல்நாடும், கீழ்நாடும்	0	3	0
உழைப்பாளிக்கு ஏன் இவ்வுலகம் இல்லை?	0	3	0
இன இழிவு ஒழிய இஸ்லாமே நன் மருந்து!	0	2	0
இதிகாசங்கள் புகட்டும் நீதி	0	2	0
உண்மைத் தொழிலாளி யார்?	0	2	0
திருச்சிப் பிரசங்கம்	0	2	0
ராமலிங்க சுவாமி பாடல்	0	2	0
திராவிடர்-ஆரியர் உண்மை	0	2	0
தமிழ் இசை-நடிப்புக் கலைகள்	0	1	0

கிடைக்குமிடம்:-
நாதன் கம்பெனி லிமிடெட்,
கச்சேரி வீதி, ஈரோடு.

அச்சிட்டு வெளியிடும் ஆசிரியர் என். கரிவரதசாமி தமிழன் அச்சகம். 59. கச்சேரி வீதி ஈரோடு.

ரோஜா முத்தையா